விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 தை 02 ஞாயிற்றுக்கிழமை (15.01.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 27



ரா ம் கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து


# சுருவிலில் கிளைமோர்த்தாக்கு இரு கடற்படையினர் உயிரிழப்பு

## மேலும் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை சுருவில் பகுதியில் ரோந்து சென்ற கடற்படையினரை இலக்கு வைத்து மேற் கொள்ளப்பட்ட கிளைமோர்த்தாக்குதலில் இரு கடற் படைச் சிப்பாய்கள் பலியாகினர்.

மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசியவைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

சுருவில் புளியங்கூடல் வீதியில் பிற்பகல் ஒரு மணியளவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட் டிருந்தவர்கள் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ வன்முறைகள் குறித்து முறையிட கஜேந்திரன் எம்.பி. விசேட நடவடிக்கை

### தொலைபேசி இலக்கங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் பொதுமக்கள் கைது செய்யப்படும் போது, தாக்கப்படும் போது, சித்திரவதை செய்யப் படும் போது , கடத்திச் செல்லப்படும் போது அது குறித்து உடனடியாக தனக்குத் தெரி யப்படுத்துமாறு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் அறிவித்துள்ளார்.

அரசினாலும் இராணுவத்தினராலும் தமிழ் மக்கள் மீது மேற் கொள்ளப்படும் கொடூ ரங்கள் குறித்து உடனுக்குடன் வெளியுல கிற்கு அம்பலப்படுத்தி மக்கள் மீதான கைது கள், சித்திரவதைகள், கொலைகள், பாலியல் வல்லுறவுகள் என்பவற்றை நிறுத்துவதற்கா கவும் காணாமல் போனவர்களை மீட்பதற்கு வசதியாகவுமே இந் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒன்றரை மாதகாலப் பகுதியில் யாழ்.குடாநாட்டில் மாத்திரம் நாற்பதிற்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் படை யினராலும் அவர்களுடன் இணைந்தியங் கும் துணைப்படை ஆயுதக்குழுக்களினாலும் கொடூரமாக கொல்லப்பட்டு நூற்றிற்கும் மேற்பட்டோர் சுடப்பட்டும் அடித்தும் காயப் படுத்தப்பட்டுள்ளனர்.

30 இற்கும் அதிகமானோர் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். புங்குடுதீவில் தர்சினி கொடூரமாக பாலியல் வல்லுறவுக்குட்படுத் தப்பட்டு கொல்லப்பட்ட பின்னரும் படையி னர் பல பெண்கள் மீது பாலியல் வல்லுறவு முயற்சிகளில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## க.கா.குழு அலுவலகம் மீதான தாக்குதல் விடுதலைப்புலிகள் கடும் கண்டனம்

(கிளிநொச்சி)

மட்டக்களப்பில் கண்காணிப்புக்குழு அலுவலகம் மீதான தாக்குதலானது போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு எதிரான தாக்குதலே என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அரசியல் துறைப்பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கண்காணிப் புக்குழுத்தலைவர் ஹக்றூப் ஹொக்லண் டிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

மட்டக்களப்பு போர்நிறுத்த கண்காணிப் புக்குழு அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக நாம் வருத்தமும் கவ லையும் அடைகின்றோம்.

இத் தாக்குதலில் எவரும் பாதிப்பு ஏற்பட வில்லை என்பது ஆறுதல் அளிக்கின்றது. இது நிராயுதபாணிகளான கண்காணிப்பாளர் மீதான தாக்குதல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தி னுள் இத்தாக்குதல் இடம்பெற்றது என கண் காணிப்புக்குழுவிற்கு அனுப்பியுள்ள கடிதத் தில் தெரிவிக்கப்பட்டது. (ச-4,6)

## திருகோணமலையில் கைக்குண்டுத்தாக்குதல் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயம்

(திருகோணமலை)

திருகோணமலை காந்தி நகரில் நேற்று மாலை அடையாளம் தெரியாத நபர்கள் நடத்திய கைக்குண்டுத்தாக்குதலில் ஒரே குடும் பத்தைச்சேர்ந்த நால்வர் காயமடைந் தனர்.

காந்திநகரில் உள்ள நகரசபை விடுதி யில் குடும்பத்தினர் தொலைக்காட்சி பார்த் துக் கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கி ளில் வந்தவர்கள் விடுதிக்குள் கைக்குண்டை வீசியுள்ளனர்.

இச்சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த வீ.இராஜேந்திரன் (வயது 35) இ.இராஜேஸ் வரி (வயது 35) இ.வித்தியா (வயது 6), இ.வித் தியாதரன் (வயது 4) ஆகியோர் காயமடைந் தனர். இ.ராஜேஸ்வரன் படுகாயமடைந் துள்ளதால் அவரது உடல்நிலை கவலைக்கிட மாக இருப்பதாக திருகோணமலை மருத்து வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-4)

## கண்காணிப்புக்குழு அலுவலகத்திற்கு நேற்று முதல் பொலிஸ் பாதுகாப்பு

வடக்கு கிழக்கில் அமைந்துள்ள யுத்தநிறுத் தக்கண்காணிப்புக்குழுவின் அலுவலகங் களுக்கு நேற்று முதல் மேலதிக பொலிஸ் பாதுகாப்பினை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மட்டக்களப்பு கண்காணிப்புக் குழு அலு வலகத்தில் நேற்று முன்தினம் மேற்கொள் ளப்பட்ட குண்டுத்தாக்குதலை யடுத்து இந்நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஹெலன் ஓலெப்ஸ் டோட்டரயர் தெரிவித்தார்.

நிலைமையைக் கருத்திற்கொண்டு மட் டக்களப்பில் கண்காணிப்புக்குழுவின் பணி களில் இருந்து விலகிக்கொள்வது தொடர்பாக தொடர்ந்து ஆராய்ந்து வருகிறோம் என அவர் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சிற்கான இடம் குறித்துப்பேச வியாழனன்று சர்வகட்சி மாநாடு

(கொழும்பு)

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை நடத்தும் இடம் குறித்த இணக்கப்பாட்டை எட் டும் நோக்குடன் எதிர்வரும் வியாழக்கிழமை இரண்டாவது சுற்று சர்வகட்சி மாநாடு கூட்டப் படவுள்ளது.

இம் மாநாட்டில் அமைதிப் பேச்சுக்கள் குறித்து எந்தவிதமான நிகழ்ச்சி நிரலும் தயா ரிக்கப்படப் போவதில்லை திறந்த மனதுடன் சில விடயங்கள் பேசப்போகின்றோம்.

பேச்சுக்கான இடம் தொடர்பில் தென்னி லங்கையின் இணக்கப்பாட்டை எட்டுவதே இச்சந்திப்பின் நோக்கமாகுமென ஜனாதிபதி மகிந்த தெரிவித்தார். தென்னிலங்கை சிங்க ளக்கட்சிகளுடன் பேசிய பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய சிறுபான்மைக் கட்சிகளை அழைத்து ஜனாதிபதி பேசவுள்ளார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன்.

இந்த சர்வ கட்சி (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலைத் தாக்குதலில் இரு போராளிகள் வீரச்சாவு

(திருகோணமலை)

திருகோணமலை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான தியாகவனம் என் னும்இடத்தில் நேற்று முன்தினமிரவு 50 இராணுவத்தினர் மேற்கொண்ட ஊடுருவித் தாக்குதலில் இரு போராளிகள் வீரச்சாவடைந் துள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள் ளனர்.

கட்டைப் பறிச்சானைச் சேர்ந்த லெப்டினன் குமுதன் (தர்மலிங்கம் சுரேஷ்ரூபன்) கிளி வெட்டியைச் சேர்ந்த 2ஆம் லெப்டினன் ஜசோ (நாகர்ராசா ராசன்) ஆகிய இருபோரா ளிகளே வீரச்சாவ (12 ஆம் பக்கம் பார்க்க)


EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 077-2349999,

011-2372952/3, 011-2360290/1

e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.



எக்ஸ்போ எயார்



வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# மன்னிப்பே மனித வாழ்வை மகத்துவம் நிறைந்ததாக்கும்

மனித வாழ்விலே கொடுப்பதற்கு கடினமாகவும், எல்லோரிடமும் இருந்து பெறுவதற்கு இலகுவானதாகவும் காணப்படுவது மன்னிப்பு ஆகும்.



இது ஆளுக்கு ஆள் காலத்திற்குக் காலம்இடத்திற்கிடம் வேறுபடுவதை அவதானிக்கலாம்.

மன்னிப்பு மனித வாழ்வில் பெருமளவு செல்வாக்குச் செலுத்துவதாகவும் அதிகளவு விரும்பப்படுவதா கவும் காணப்படுகிறது. சீனப் பழமொழி 'ஓர் அழகான மலரை கசக்கிப் பார்க்கும் போது அதில் எந்தளவு நறுமணம் வீசுகின்றதோ அதனைவிட நறுமணமுள்ளது மன்னிப்பு ஆகும்'என்கிறது.

தனிமனித, குடும்ப சமூக வாழ்வில் மன்னிப்பு ஒவ்வொரு நிமிடமும் தேவைப்படும் ஒன்றாகக் காணப்படுகிறது.

எமது நாளாந்த வாழ்வில் நாம் பல பயமுறுத்தலுடன் கூடிய மன்னிப்பின் அனுபவங்களை அவதானித்து இருக்கலாம். பிள்ளைகளை பெற்றோர் பயமுறுத்தி மன்னிப்பு வழங்கும் பழக்கமுண்டு. பாடசாலை வாழ்வில் மாணவர்கள் தவறிழைக்கும் போது ஆசிரியர்கள் இத்தகைய அணுகுமுறையை கையாளுவார்கள். திருமறையில் இத்தகைய முறையை தொடக்க நூல் 30

## பரமபிதா காட்டிய பாதை

ஆம் அதிகாரம் தொடக்கம் 38ஆம் அதிகாரம் வரையுள்ள பகுதியை வாசித்துப் பார்க்கும் போது புரிந்து கொள்ள முடியும்.

யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பின் மீது பொறாமை கொண்டதன் விளைவாக ஆரம்பத்தில் குழியில் போட்டார்கள்; பின்னர் எகிப்தின் வியாபாரிகளிடம் அடிமையாக விற்றுவிட்டார்கள். எகிப்துக்குச் சென்ற யோசேப்பு பார்வோனுக்கு அடுத்த அதிபதியாகப் பதவி உயர்வு பெற்றார்.

இந் நிலையில் கானானில் பஞ்சம் ஏற்படவே அங்கு வாழ்ந்த யோசேப்பின் குடும்பம் எகிப்துக்கு வரவேண்டிய தேவை ஏற்பட்டது. அப்பொழுது யோசேப்பு தனக்கு தீங்குசெய்த தன் சகோதரர்கள் தன்னிடத்திலே உதவி பெற வந்திருக்கிறார்கள் என அறிந்தபோது மிகவும் துன்புற்று அவர்களை நோக்கி 'நீங்கள் எனக்கு தீமை செய்தீர்கள் இப்பொழுது நேரம் வந்தாயிற்று நான் உங்கள் தீமைக்கு ஏற்ற தண்டனையை இப்பொழுது தரமுடியும். ஆயினும் நான் உங்களை மன்னிக்கிறேன்'எனக் கூறி பயமுறுத்தலுடன் கூடிய ஓர் மன்னிப்பை வழங்கினார்.

**யாழ். ராதவல்லி**

இது உண்மையான ஓர் மன்னிப்பு அல்ல, மற்றவர்களை பயமுறுத்தி வழங்கும் மன்னிப்பு. ஓர் பழிவாங்கும் உணர்வுடன் எழுந்த ஓர் மன்னிப்பாகும். இன்று எம் தேசத்தில் இத்தகைய மன்னிப்பே காணப்படுகிறது. ஒரு சில மக்களை மன்னிக்கிறோம் எனக் கூறினாலும் பயமுறுத்தலுடன் வருகின்ற பழிவாங்கும் உணர்வு இதில் தொனிக்கிறது. □

# பாடசாலை நிர்வாகம் வலுப்படுத்தப்படும்

(கொழும்பு)

இலங்கையின் கல்வி வலைப்பின்னலில் நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்காக சீரான திட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக பாடசாலை நிர்வாகத்தை வலுப்படுத்தும் முயற்சிகளை பாடசாலை அபிவிருத்திக் குழுக்கள்; திட்டமிடல் குழுக்கள் ஆகியன மேற்கொண்டு வருவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்மூலம் பாடத்திட்டம் மற்றும் பாடத்திட்டத்துடன் இணைந்த செயற்பாடுகளின் ஆக்கத்திறனை மேம்படுத்தத் திட்டமிட்டிருப்பதாக கல்வியமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நிர்வாகத்தை பன்முகப்படுத்துவதன் மூலம் கல்வி வலைப்பின்னலில் நிலவும் பல பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்பது அமைச்சின் எதிர்பார்ப்பு எனவும் அவர் குறிப்பிட்டார்.உத்தேசத் திட்டத்தின் ஊடாக ஒருங்கிணைப்பு ஆறறல்களை மதிப்பிட்டு அவற்றை அபிவிருத்தி செய் வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

மனிதவள அபிவிருத்தி மூல உபாயங்களை வகுப்பதன்மூலம் துறைசார்ந்த நெருக்கடிகளுக்கு துரித தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்.

ஆட்சேர்ப்பு, இடமாற்றங்கள், பதவி உயர்வுகள் ஆகியவற்றை சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (த-7)

## இராசி பலன்

**15.01.2006**
**(தை 2, ஞாயிற்றுக்கிழமை)**
**பிரதமை பிற்பகல் 5.28 மணிவரை**
**பூசம் பின்னிரவு 12.04மணிவரை**
**இராகுகாலம் 5.04-6.34 மணிவரை**
**சுபநேரம் 9.34-11.04 மணிவரை**
**பட்டிப் பொங்கல்**

| | |
|---|---|
| மேடம் | தெய்வசிந்தை, புதிய விடயம், முயற்சி தாமதம், மனச்சஞ்சலம். |
| இடபம் | சகோதரர் உதவி, தெய்வதரிசனம், பிரயாண நன்மை, நல்லசெய்தி. |
| மிதுனம் | எடுத்த காரிய தாமதமாகும், கற்பனை மிகுதி, கடின வார்த்தை, அதிக செலவு. |
| கடகம் | பிரயாணம், தெய்வசிந்தை, விருந்துபசாரம், பெரியோர் சந்திப்பு. |
| சிங்கம் | தொழில் நன்மை, வாக்கு மேன்மை, சயன சுகக் குறைவு, பிரயாணம். |
| கன்னி | தெய்வசிந்தை, தொழில் சிந்தை, பெருமையடைதல், முயற்சி கைகூடும். |
| துலாம் | அதிகாரம், கடின முயற்சி, நல்ல செய்தி, பொருள் சேர்க்கை. |
| விருச்சிகம் | கட்டுப்பாடு, தந்தை வழி உறவு, வீண் பயம், முயற்சி தாமதம். |
| தனுசு | உடல் நலக் குறைவு, தொழில் சிந்தை, காரிய தாமதம், அபகீர்த்தி. |
| மகரம் | தெய்வசிந்தை, நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும், கீர்த்தி. |
| கும்பம் | கீர்த்தி, அதிகாரம், போசன சுகம், உற்சாகம். |
| மீனம் | மனச் சஞ்சலம், பணவிரயம், வேலைச் சுமை, காரிய தடங்கல். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கலையார்வலன் கு.இராயப்புவின் எட்டாவது உருவாக்கமான 'கடலலைகள் கொஞ்சும் நகர்' என்ற நூல் வெளியீட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.30மணிக்கு குருநகர் கார்மேல் மண்டபத்தில் அ.யேசுராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வரவேற்புரையை திருமதி மெரிசியா சீலனும், ஆசியுரையை அருள் கலாநிதி அ.பி.ஜெயசேகரமும், வெளியீட்டுரையை வி.ஜே.கொன்ஸ்ரன்ரைனும் நயப்புரையை யாழ்கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ். தங்கராஜாவும் நிகழ்த்தவுள்ளனர்.(து-132,133)

# தமிழர்களின் வீடுகள் மீது— சிங்களக் காடையர்கள் கல்வீச்சு

(திருகோணமலை)

திருகோணலையில் சிங்கநகர் சந்தியிலிருந்து தமிழர் வாழும் பிரதேசங்களிற்கு முகங்களை கறுப்புத் துணிகளால் கட்டியவாறு கைகளில் தடிகள், பொல்லுகளுடன் சென்ற சிங்களக் காடையர் குழுவொன்று அங்கு தமிழர்களின் வீடுகள் மீது சரமாரியாக கல்வீச்சை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து உடனடியாக தமிழ் மக்கள் பொலிஸாருக்கு அறிவித்திருந்த போதிலும் உடனடியாக அவ்விடத்திற்கு பொலிஸார் செல்லவில்லை.

அதன் பின்னர் சுமார் இரண்டரை மணித்தியாலங்களின் பின்னர் அவ்விடத்திற்கு பொலிஸார் சென்ற போதும் காடையர் குழு அவ்விடத்திலேயே தரித்து நின்றுள்ளது.

எனினும்,இது தொடர்பாக பொலிஸார் அவர்களை விலகிச் செல்லுமாறு கோரவோ, விசாரணைகளை நடத்தவோ இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் தமிழ் மக்கள் எவரும் வீதிகளுக்கு இறங்கமுடியாத நிலையில் இருந்தனர்.தமிழ் மக்களின் போக்குவரத்தினை கட்டுப்படுத்தும் ஒரு உள் நோக்குடனேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என தமிழ் மக்கள் கருதுகின்றனர். (க)

# நல்லூர் சங்கிலிதோப்பில் கிளைமோர்க் குண்டுமீட்பு

(நல்லூர்)

பொங்கல் பண்டிகையைப் பக்தி பூர்வமாகத் தமிழ் மக்கள் கொண்டாட ஆயத்தமாகக் கொண்டிருந்த காலை வேளையிலே வெடிக்கச் செய்ய ஆயத்தமான நிலையில் வைக்கப்பட்டிருந்த கிளைமோர்க் குண்டு இராணுவத்தினால் கண்டு பிடிக்கப்பட்டதால் மாபெரும் விபத்தொன்று தெய்வாதீனமாக தவிர்க்கப்பட்டது.

இச்சம்பவம் நேற்றுக் காலை பருத்தித்துறை வீதியில் நல்லூர் சங்கிலி தோப்பு என்ற இடத்தில் நடைபெற்றது.

சங்கிலிதோப்பில் சங்கிலி மன்னன் அரண்மனை வாயிலுக்கண்மையில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் குண்டு இராணுவத்தினரால் கண்டுபிடிக்கப்படாவிட்டால், பெருமளவு உயிர்,பொருட் சேதங்கள் ஏற்பட்டிருக்குமென அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

எந்நேரமும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் பருத்தித்துறை வீதியில் பயணிகள் வாகனங்கள், தனிப்பட்டோரது வாகனங்கள், சைகிள் வண்டிகள், பாதசாரிகள் என போக்குவரத்து அதிகமாகவே காணப்படுவது இயல்பு. அத்துடன் நேற்றைய தினம் பொங்கல் தினமாக அமைந்து இருந்ததால் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு வழிபாட்டுக்குச் செல்வோர் தொகையும் அதிகமாக இருந்தது. இந்நிலையில் அந்தக் கிளைமோர் வெடித்திருந்தால் என்பதை எண்ணிப பார்க்கவே முடியாது என அப்பகுதி மக்கள் அச்சத்துடன் தெரிவிக்கிறார்கள்.

நல்லநாளும் அதுவுமாய் இத்தகைய கோர சம்பவம் ஒன்று நடைபெறாமல் முன்கூட்டியே இராணுவத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டது. இறையருள் தான் எனவும் அப்பகுதி மக்கள் கூறுகின்றார்கள்.

கிளைமோர் வெடி கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அதனை அப்புறப்படுத்தும் வரை வீதியில் போக்குவரத்து தடைசெய்யப்பட்டதால் சிறிது நேரம அப்பகுதி ஒரே அல்லோலகல்லோலமாகக் காணப்பட்டது.(து-132,133)

# இளைஞர் மீது படையினர் தொடர்ந்தும் தாக்குதல்

(பொன்னாலை)

வலிகாமம் மேற்குப் பகுதியில் கடந்த சில நாட்களாக இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகரித்து வருகின்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வர்த்தக நிலையங்கள்,பொது இடங்களில் கூடி நிற்கும இளைஞர்களையும் பஸ் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்களையும் மறித்து விசாரணை செய்து விட்டு சந்தேகத்திற்கிடமானவர்களை மோசமாகத் தாக்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக கையடக்கத் தொலைபேசிகளை பாவித்து வரும் இளைஞர்களை வழிமறித்து அவற்றில பதிவுசெய்து வைத்திருக்கும் படப் பிரதிகளைப் பார்வையிட்டதன் பின் அவர்களைத் தாக்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-49)

# 15 மில்லியன் ரூபா செலவில் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம்

(பொன்னாலை)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகம் கந்த ரோடையில் சுமார் 15 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் அலுவலகத்தை அமைப்பதற்காக 4 பரப்புக் காணியை உடுவில் பிரதேச செயலகம், சுன்னாகம் சுப்பிரமணியம் வீதி கந்த ரோடைப் பகுதியில் வழங்கியுள்ளது.

ஏற்கனவே இவ் அலுவலகத்தை தெல்லிப்பழை கூட்டுறவு வைததிய சாலை வளாகத்தில் அமைப்பதற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் கட்டட வேலைப் பணிகள் தொடங்குவதில் ஏற்பட்ட காலதாமதத்தால் ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்ட போது இவ்வலுவலகத்தை உடுவில் பிரதேச செயலகப் பகுதியிலாவது அமைப்பதற்காகக் காணியொன்றை வழங்குமாறு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி செல்வி கனகரத்தினம் நவமலர் உடுவில் பிரதேச செயலரிடம் அவசர கோரிக்கை விடுத்திருந்தார்.

சுகாதார வைத்திய அதிகாரியின் கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு உடுவில் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் கந்தரோடையில் 4 பரப்புக் காணியை உத்தியோக பூர்வமாக வழங்கியிருப்பதுடன் இக் காணி பொருத்தமாக இல்லாவிட்டால் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் சுமார் 500 மீற்றர் தொலைவில் பொருத்தமான காணியை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார். (க-49)

# ஜே.வி.பியின் எம்.பியை மறித்து— திருமலை சிங்கள மக்கள் தாக்குதல்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகர சிங்கள மக்கள் குழுவினரால் தாக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் திருகோணமலை நகரின் நுழைவாயிலினை அடுத்துள்ள அபயபுரம் பகுதியில் வைத்து ஹர்த்தாலுக்கு எதிரான சிங்கள மக்கள் குழுவினரால் அவர் தாக்கப்பட்டார்.

சம்பவம் நடைபெற்ற பகுதிக்கு விரைந்த பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுப்பிரயோகம் செய்து இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பாராளுமன்ற உறுப்பினரை மீட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-4)

# கூட்டமைப்பு எம்.பிக்களின் — கூட்டம் நாளை நடைபெறும்?

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் ஒன்று இந்த வாரம் நடைபெறவுள்ளது.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இதுபற்றித் தெரிவிக்கையில், அனேகமாக நாளை கூட்டம் நடைபெறும் என்றும் தற்போதைய அரசியல் நிலைமை, வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சமூக வாழ்க்கை, சமாதான நடைமுறைகள் ஆகியன உட்பட பல்வேறு முக்கிய பிரச்சினைகள் குறித்து இக் கூட்டத்தில் ஆராயப்படும் என்றும் தெரிவித்தார்.

ஜோசப் பரராஜசிங்கத்தின் திடீர் மறைவு காரணமாக ஏற்பட்டுள்ள பாராளுமன்ற வெற்றிடத்திற்கு ஒருவரை நியமிப்பது தொடர்பாகவும் இக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. (க-7)


'பரமசிவன்' அஜித் - லைலா

## சேரனின் மலையாள ராசி

டைரக்டர் – சேரனுக்கும் மலையாள நடிகைகளுக்கும் அப்படி ஒரு ராசி.

'ஆட்டோ கிராப்' படத்தில் சேரனுடன் கோபிகா, மல்லிகா நடித்தனர். 'தவமாய் தவமிருந்து' படத்துக்காக மலையாள பட நாயகி பத்மபிரியாவை அழைத்து வந்தார். அடுத்து 'ஆடும் கூத்து' படத்தில் அவரது ஜோடி நவ்யாநாயர். இனி சேரனின் 'பொக்கிஷம்' படத்தில் ஜோடி சேருபவர் கேரள இறக்குமதி 'காதல்' சந்தியா. குறைந்த செலவில் நிறைந்த நடிப்பு அங்கிருந்துதான் கிடைக்கிறதாம்.


'கொக்கி' கரண் - சஞ்சனா

'டிஷ்யூம்' கதையை பதினெட்டு நாட்களில் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார் டைரக்டர் சசி.

*

ஜெய் ஆகாஷ் நடிக்கும் 'வேட்டை' படத்தில் கீர்த்தி சாவ்லா கதாநாயகியாக நடிக்கிறார்.

## 'ஆதி' படத்தில் கதைதான் 'ஹீரோ' – விஜய்



விஜய் நடிப்பில் தீபாவளிக்கு திரைக்கு வந்த 'சிவகாசி' ரசிகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

பொங்கலுக்கு விஜய், திரிஷா நடித்த 'ஆதி' படம் ரிலீஸ் ஆகியிருக்கிறது. 'ஆதி' படம் பற்றி விஜய் சொன்ன தகவல்கள்:

வழக்கமாக நான் நடிக்கும் படங்களில் ஓர் அறிமுகப்பாடல் காட்சி வரும். எனக்காகவும் ரசிகர்களுக்காகவும் சில காட்சிகளைச் சேர்ப்பார்கள். ஆனால் நான் நடித்துப் பொங்கல் தினத்தில் வெளியாகும் 'ஆதி' படம் அப்படி அல்ல.

நானும் திரிஷாவும் நடித்திருக்கிறோம் என்றாலும் இந்தப் படத்தில் கதை - திரைக்கதைதான் 'ஹீரோ'.

வாழ்க்கையில் எல்லோருக்கும் ஏற்றத்தாழ்வு, தடுமாற்றங்கள் வரும். எனக்கும் 2 வருடங்கள் தடுமாற்றம் இருந்தது. 'திருமலை' படத்தின் மூலம் என்னை நிமிர வைத்தவர் டைரக்டர் ரமணா. அவர் 'ஆதி' படத்தை இயக்கியிருக்கிறார்.

ஒரு தெலுங்குப் படம்தான் 'ஆதி'யாகியிருக்கிறது. ஆனால் தெலுங்குப் பட்த்தை விட பலமடங்கு பிரமாண்டமாக இந்தப் படம் உருவாகியிருக்கிறது. இப்படத்தில் எனக்கு எவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறதோ அதே அளவுக்கு திரிஷாவுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரது நடிப்பும் அற்புதமாக இருக்கிறது.


'ஒரு பொண்ணு ஒரு பையன்'
சந்தீப் –

## சினிமாச் சிதறல்

## 'சிவாஜி' யில் ஐஸ்வர்யா!



'சிவாஜி' படத்தில் ரஜினி ஜோடி ஸ்ரேயா என்பது ஊர் அறிந்த விஷயம். இதில் ரஜினி ஜோடியாக ஐஸ்வர்யாராயை நடிக்க முயற்சி செய்ததும் உலகம் அறிந்த ரகசியம். இன்னும் சில மும்பை நடிகைகளின் பெயர்களும் அடிபட்டன.

'சிவாஜி' படத்தின் கதைப்படி ரஜினியுடன் சில காட்சிகளில் நடிக்க இன்னொரு ஜோடி தேவைப்படுகிறது. அது மிகவும் பிரபலமான நடிகையாக இருக்க வேண்டும் என்பது டைரக்டர் ஷங்கரின் ஆசை.

இதற்காக மீண்டும் ஐஸ்வர்யாராயின் கால்ஷீட்டை ஒரு சில நாட்களுக்காவது வாங்க முடியுமா என்ற முயற்சியில் இறங்கி இருக்கிறாராம் ஷங்கர்.


'பருத்திவீரன்' பிரியாமணி

## சத்யராஜின் உதவி



மணிவண்ணன் மகன் ரகுவண்ணன் நடிக்கும் படம் 'அகதி'.

இதில் சத்யராஜ் நடிக்க வேண்டும் என்று மணிவண்ணன் வைத்த வேண்டுகோள் ஏற்கப்பட்டுவிட்டது என்கிறது கோடம்பாக்க வட்டாரம். மகனுக்கு அறிமுகம் கொடுக்க சத்யராஜ் கை கொடுத்திருப்பதால், மனம் நெகிழ்ந்து இருக்கிறாராம் மணிவண்ணன்.

## ஏ பி சி டி

### திரை விமர்சனம்

மூன்று பெண்களைச் சந்திக்கும் ஒரு இளைஞனின் வாழ்க்கையில் நடக்கும் ஆத்மார்த்தமான கதை.

வேலை தேடும் பட்டதாரி வாலிபன் ஆனந்த். பஸ்ஸில் போகும்போது தனது சான்றிதழை யதார்த்தமாக பாரதி என்ற பெண்ணிடம் கொடுக்கிறான். அதை அவள் தொலைத்துவிடுகிறாள். பின்னர் அதைக் கண்டுபிடித்து ஆனந்திடம் சேர்க்க அவர்களிடையே புது நட்பு மலர்கிறது.

ரோட்டில் அடிபட்டுக் கிடக்கும் பெண் திவ்யாவை ஆஸ்பத்திரியில் சேர்த்து அவள் உயிரைக் காப்பாற்ற திவ்யாவுக்கும் ஆனந்த் மீது ஈர்ப்பு ஏற்படுகிறது.

இதற்கிடையே வாடகை வீட்டில் குடியிருக்கும் ஆனந்த் வீட்டு உரிமையாளரின் மகள் சந்திராவுக்கு நட்பு ரீதியாகச் சில உதவிகள் செய்கிறான். மனதால் இருவருக்கும் ஒத்துப்போகிறது. அவள் விதவை என்று தெரிந்தும் அவள் மீது அவனுக்கு காதல் ஏற்படுகிறது. இந்த மூன்று பெண்களில் ஆனந்த் யாரைக் கை பிடிக்கிறான் என்பது கிளைமாக்ஸ்.

ஆனந்தாக சியாம். கோவிலில் ரவுடிகளை அடித்து விரட்டுவது வீரம். சிநேகாவிடம் அடிபடுவது சோகம். நடிப்பில் புது பரிமாணம் பெற்றிருக்கிறார்.

விதவை பெண்ணாக சிநேகா. கணவர் செய்யும் கொடுமைகளை அம்மாவிடம் சொல்லி காயங்களைக் காட்டிக் கதறுவது உணர்ச்சியின் உச்சம். அடிபட்டு துடிக்கும் சியாமுக்கு பரிவு காட்டுவது சிலிர்ப்பு. நடிப்பில் மின்னி ரசிகர்களைக் கவர்கிறார்.

பாரதியாக நந்தனா. பருவப் பெண்ணின் கஷ்டங்கள் என்ன என்பதைப் புரிய வைக்கிறார். கிடைத்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்தி இருக்கிறார். திவ்யாவாக அபர்ணா. பாடல் காட்சியில் கவர்ச்சி காட்டியிருக்கிறார். தேவாலயத்தில் ஆனந்திடம் உருகுவது யதார்த்தம்.

பஸ் கண்டக்டராக வடிவேலு. மாற்று வண்டியில் ஏறி மாட்டிக்கொண்டு அடி வாங்கும்போது வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கிறார். சிங்கமுத்து, அல்வா வாசு, லட்சுமணன், போண்டாமணி, கிரேன் மனோகர் சிரிப்புக் கூட்டணி வெற்றி பெற்றிருக்கிறது.



குடந்தை சுப்பையா, அஞ்சலி தேவி, மதன் பாப், ரஜினி, சாலினி, ஸ்வேதா பாரத், ஸ்ரீ ரஞ்சனி, குயிலி ஆகியோரும் ஜீவனுள்ள கதாபாத்திரங்கள்.

பா.விஜய் எழுதியுள்ள குட்டிப் பாடல்கள் மனதிற்கு இனிமை சேர்க்கின்றன.

இசை: இமான், பாடல்கள் அனைத்தும் வைரம் போல் மின்னுகின்றன.

கொடுமைக்கார கணவராக நடித்து படத்தை இயக்கிய ஷரவண சுப்பையா மிரட்டி இருக்கிறார். பெண்களின் வாழ்க்கையில் நடக்கும் யதார்த்தமான கதையை படமாக்கி இருக்கிறார். விதவைப் பெண் மன ரீதியாக படும் கஷ்டங்களைக் காட்டியிருக்கும் விதம் கல் மனதையும் கரையச் செய்யும். கதைக்கும், தலைப்புக்கும் முழுக்க முழுக்க சம்பந்தப்பட்ட கதை.

***ஏபிசிடி – கதையல்ல – திரையில் எழுதப்பட்ட காவியம்.***

# தமிழ்மக்களும் இராணுவத் தலைமையும்

**இந்த இருமுனைச் செயற்பாடுகளை நன்கு திட்டமிட்ட முறையிலேயே சிங்கள-பௌத்த பேரினவாத ஆட்சிப்பீடம் மேற்கொண்டு வருவதைச் சுட்டிக்காட்டி, அதனூடே பல முக்கியமான விடயங்களைத் தர்க்கிப்பதுவே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.**

தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்கும் நாளாந்த வாழ்வியல் பிரச்சினைக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஊடாக உரியதொரு தீர்வு கிட்டக்கூடும் என்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் இப்பொழுது குலைந்து வருவதை காணக் கூடியதாக உள்ளது. தமிழ் மக்கள் மீது இலங்கை இராணுவத்தினர் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்ற தாக்குதல்களும், கொலைச் செயல்களும் மனிதஉரிமை மீறல்களும் வெளிப்படையாகவே நடைபெற்றுக் கொண்டு வருவது ஒருபுறம் இருக்கையில் மறுபுறத்தில் தற்போதைய அரசு சமாதான முன்னெடுப்புக்களுக்கு எதிரான செயற்பாடுகளைத் தீவிரமாக மேற்கொண்டு வருவதையும் அவதானிக்க கூடியதாக உள்ளது.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்பு இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா, சமாதான முன்னெடுப்புகளுக்கு எதிராக முன்னரும் செயல்பட்டு வந்தவராவர். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொண்டவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு சரத் பொன்சேகா முன்னரும் மறுதலித்தே வந்துள்ளார். 'இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள பொதுமக்களின் வாழ்விடங்களை விட்டு இராணுவம் வெளியேற மாட்டாது' என்ற 2002 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சரத் பொன்சேகா பகிங்கரமாகவே அறிவித்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்க மறுத்த விடயம்,அனைவருக்கும் நினைவிருக்க கூடும்.

திரும்பவும் இராணுவத் தளபதியாக சரத்பொன்சேகா பதவியேற்ற பின்பு தமிழ் மக்களுக்கு எதிரான இராணுவ வன்முறைகள அதிகரித்து வருவதோடு அவற்றிற்கு எதிரான மக்கள் போராட்டங்களையும் இராணுவம் தன் தாக்குதல்கள் மூலம் அடக்க முயன்று வருகின்றது.

***சரத்பொன்சேகாவின் தமிழ் துவேஷக் கருத்துக்கள்***

இவற்றோடு இன்னுமொரு விடயமும் நிலைமையை மேலும் மோசமாக்கி வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அது இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் தமிழ்த் துவேஷக் கருத்துக்கள்.!


யாழ். குடாநாட்டில் பொதுமக்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் மற்றும் மாணவர்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட மேற்கொண்டு வருகின்ற மிலேச்சத்தனமான தாக்குதல்களை இராணவத் தளபதி சரத் பொன்சேகா நியாயப்படுத்தி உள்ளதோடு மட்டுமல்லாது, அவை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்றும் உறுதியளித்திருக்கின்றார். தமிழ் மக்கள் தங்கள் மீது சிங்கள இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படுகின்ற வன்முறைகளை எதிர்த்து ஜனநாயக முறையில் மேற்கொள்கின்ற அமைதி வழிப் போராட்டங்களையும் சரத் பொன்சேகா நிராகரித்துப் பேசியுள்ளார். இத்தகைய ம்க்கள் போராட்டங்களை இராணுவப்பலம் கொண்டு அடக்குவது நியாயமானதுதான் என்கின்ற வகையில் இராணுவத் தளபதி தன் கருத்துக்களைத் தெரிவித்தும் வருகின்றார். 'தமிழ் மக்கள் பலர் ஆயுதப்பயீற்சி பெற்றுள்ள காரணத்தினால் அவர்கள் மேற்கொள்கின்ற எதிர்ப்புப் போராட்டங்களை இராணுவப் பலத்தினூடாகத்தான் அடக்க வேண்டும்' என்றும் சரத் பொன்சேகா கூற ஆரம்பித்துள்ளார். சரத் பொன்சேகா கூறுவது போல் தமிழ்மக்கள் ஆயுதப்பயிற்சி பெற்றவர்களாகவே இருக்கட்டும். இன்று அமெரிக்கா, சிங்கப்பூர் உட்பட பல நாடுகளில் குடிமக்கள் ஆயுதப் பயிற்சி பெற்றவர்களாகத் தான் இருக்கின்றார்கள். ஆனால் அந்த மக்கள் தங்கள் அரசுகளுக்கு எதிராக நடாத்துகினற ஜனநாயக வழிப் போராட்டங்களை அவர்களின் அரசுகள் இராணுவப் பலத்தைப் பிரயோகித்து அடக்குவதில்லை என்பதை ஏனோ சரத் பொன்சேகா மறந்துவிட்டார்.!

ஆனால் இவையெல்லாவற்றையும் விட இந்த ஆங்கிலப் புத்தாண்டு ஆரம்பத்தில் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அவர்கள் இளையதம்பி தர்சினி என்கின்ற 20 வயது இளம்பெண்ணின் பாலியல் வல்லுறவுப் படுகொலை குறித்துத் தெரிவித்த கருத்து ஹிட்லரின் கொடுங்கோன்மைக் கருத்துக்களையும் விட கொடூரமானவையாக அமைந்து விட்டது. தர்சினியை பாலியல வல்லுறவுக்கு உள்ளாக்கி அவரை படுகொலை செய்தது இலங்கை கடற்படையினராகவே இருக்கட்டும்!. ஆனால் இச்செயலை எதிர்த்துத் தாக்குதல் நடாத்துவதற்கு இவர்கள் (புலிகள்) யார்? என்று இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கேள்விஎழுப்பியுள்ளார்.!இதுதான் இலங்கை இராணுவத் தலைமை தமிழ் மக்களுக்குத் தருகின்ற சிங்கள பௌத்தப் பேரினவாதத்தின் நீதியாகும்.!இலங்கையின் புதிய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சிங்கள பௌத்தப் பேரினவாதத்தின் இராணுவக் குரலாக மட்டுமன்றி சிங்களப் பௌத்தப் பேரினவாதத்தின் அரசியல் குரலாகவும் இரட்டைப் பொறுப்பு எடுத்து செயல்படுவது அவதானிபபுக்குரியது.

***கள யதார்த்தத்தை உணராத சரத் பொன்சேகா...***

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தன்னை 1958 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில இருத்திக் கொண்டு, தமிழர்களை அடித்துக் கொன்றால் அவர்கள் பயந்தோடி ஒளித்துக் கொள்வார்கள் என்ற நினைப்பில் பேசிச் செயலாற்ற முனைந்து வருகின்றார். அவர் தற்போதைய கள யதார்த்தத்தை உணர வில்லை என்பதைத்தான் அவரது பேச்சுகளும் செயலும் புலப்படுத்துகின்றன. அவர் யதார்த்தத்தை உணரும்வேளை நெருங்கி வந்து கொண்டிருக்கின்றது என்பதைத்தான் அவர் இன்னும் உணரவில்லை.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து அரசு பேசி வருகின்ற போதிலும் அது ஓர் இராணுவத் தீர்வை முன்வைத்துத்தான் செயற்பட்டு வருகின்றது. இராணுவத்திற்குக் கட்டுப்பாடற்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டு இருப்பதனால் சட்டத்தையும் நீதியையும் ஒப்பந்தங்களையும் மீறி தமிழ் மக்களுக்கும் அவர்களது உரிமைகளுக்கும் எதிராக இராணுவம் வெளிப்படையாகவே செயற்பட்டு வருகிறது. இவை ஜனநாயக விழுமியங்களுக்கு எதிரானவை யாகும். தமிழீழம் என்பது தமிழர்களின் இறைமையுள்ள தேசமாகும். தம்முடைய இறையாண்மையை நிலை



நிறுத்துவதற்காகத தமிழ் மக்கள் தமது குரலை வெளிப்படை யாகத் தெரிவித்தாக வேண்டும். அவர்கள் மௌனமாக இருக்க முடியாது. அவர்கள் பேசாமல் மௌனமாக இராமல் இலங்கை அரசினதும் அதனது இராணுவத்தினதும் அராஜகத் தன்மைக்கு எதிராகத் தமது எதிர்ப்பினைத் தம்மால் முடிந்த சகல வழி களிலும் காட்டிவருகின்றார்கள. இராணுவ ஆட்சியின் கீழ் தமிழ்மக்கள் தாககப்படு வதும், கொலை செய்யபபடுவதும், காணாமல் போவதும் சர்வதேச நீதியைப் பொறுத்த வரையில் மிகப்பாரிய குற்றங்கள் ஆகும். அரசும் இராணுவமும் தமிழ் மக்களின் மீது தொடர்ந்து செய்து வருகின்ற கொடுமைகள் முன்பு ஹிட்லர் யூதர்களுக்குச் செய்த கொடுமை களைத் தான் எமக்கு ஞாபகப்படுத் துகின்றன. இலங்கையின் புதிய அரசின் பிரதிநிதிகள் அண்மையில் மேற்கொண்ட இந்திய அமெரிக்க விஜயங்கள் குறித்தும்புதிய அரசு சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்துக் கடைப் பிடித்து வருகின்ற அலட் சியப் போக்குக் குறித்தும் சற்றே ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

***மஹிந்தவின் இந்திய விஜயம்***

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயம் பலத்த தோல்வியில் முடிந்துள்ளதாகப் பல ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இலங்கைப் பிரச்சினையில் நேரடியாக இந்தியா தலையிடமாட்டாது என்றும் இலங்கை அரசிற்கு ஆயுத உதவிகள் செய்வதற்கும் இந்தியா முன்வராது என்றும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திப்பதனைக் கடைசி நேரத்தில் தவிர்த்துவிட்டார் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன. இவை நம்மவருக்கு உற்சாகம் தருவதில் வியப்பில்லைத்தான்.

இதேவேளை இலங்கையின் சிங்கள அரசுகளுக்கு கொள்கை ரீதியாக இந்தியா முக்கியமில்லை. அன்று தொட்டு இன்று வரைக்கும் இந்தியாவிற்கும் இந்திய நலனுக்கும் எதிரான செயற்பாடுகளைத் தான் இலங்கையின் சிங்களக் கடும்போக்காளர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள். தவிர முன்னர் இந்திய இலங்கையுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி ஒற்றையாட்சித் தீர்வு முறை நிராகரிக்கப் பட்டுள்ளதோடு தமிழரின் தாயகக் கோட்பாடும் கொள்கைளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதுவும் இலங்கைக்கு ஒரு பிரச்சினை. இலங்கையின் ஆட்சி மாறியபோதெல்லாம் புதிய தலைவர்கள் டெல்லிக்கு காவடி தூக்கிச் செல்வது ஓர் ஏமாற்று வித்தைதான். ஈழத் தமிழர்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுவரும் வரைக்கும் இலங்கையின் இந்தக் காவடி வேஷம் தொடர்ந்தும் நடைபெறும். தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு கிடைத்துவிட்டால் இலங்கைக்கு இந்தியா தேவையில்லாது போய்விடும்.

***மங்களவின் அமெரிக்க விஜயம்***

உண்மையில் இலங்கை மிக முக்கியமானவையாகக் கருதுவது மேலைநாடுகளைத்தான். இலங்கை இந்தியாவிற்கு காவடி தூக்கும் அதேவேளையில் மேலைநாடுகளுக்குத் தனது பிரதிநிதிகளை அனுப்பி பொய்மைப் பரப்புரைகளை மேற்கொண்டு சமாதான முயற்சிகளை இழுத்தடிக்கும் வேலைகளை மேற்கொண்டு வருகின்றது. இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் அண்மைய அமெரிக்க விஜயத்தை ஓர் உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். மங்கள சமவீர தன்னுடைய அமெரிக்க விஜயத்தின் போது சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

ஆசியக் கண்டத்திலேயே மிக நெடுங் காலமாக ஜனநாயக மரபுகளைப் பேணி வருகின்ற நாடு இலங்கை என்றும் இனப் பிரச்சினையை ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையிலும் மனித உரிமைகளின் அடிப்படையிலும் இலங்கை அரசு தீர்த்து வைக்கும் என்றும் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

எளிதில் நம்பக் கூடிய, ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்துக்களா இவை?

இலங்கையின் ஜனநாயகம் தமிழ் மக்களுக்கு எதிராக இயங்கி வருகின்றது. இலங்கையின் அரசியல் யாப்பு தமிழ் மக்களுக்கு எதிராக ஆக்கப்பட்டுள்ளது. இலங்கையின் நீதித்துறை தமிழ் மக்களுக்கு எதிராக செயறபடுகின்றது.இலங்கையின் சிங்கள அரசுகளும் அரசியல்வாதிகளும் தமிழ் மக்களுக்கு எதிராக இயங்கி வருகின்றார்கள். இலங்கையின் அரச மதமான பௌத்த மதத்தின் பிக்குமார்கள் தமிழ் மக்களுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளார்கள். இலங்கையின் முப்படைகள் தமிழ் மக்கள் மீது தொடர்ந்து புரிந்து வருகின்ற மனித



உரிமை மீறல்களும், படுகொலைகளும் ஹிட்லரின் கொடுமைகளுக்கு ஒப்பானவை. ஆனால இந்த அப்பட்டமான உண்மைகளையெல்லாம் தனது பொய்ப்பரப்புரையூடாக அமைச்சர் மங்கள சமரவீர மறைக்க முனைகின்றார்.மங்கள சமரவீர வேறு ஒரு விடயத்தையும் சொல்லியிருக்கின்றார்.

***சாத்தான் ஓதும் வேதம்***

இதுவரை காலமும் இலங்கை அரசு ஏராளமான விட்டுக கொடுப்புக்களை மேற்கொண்டு நெகிழ்ச்சிப் போக்கினை கடைப்பிடித்து வருகின்றது. அதேபோல் விடுதலைப் புலிகளும் நெகிழ்ச்சிப் போக்கினைக் கடைப்பிடிக்க வேண்டும். இது மங்கள சமரவீரவின் வாயினூடாக வெளிப்பட்டுள்ள மஹிந்தவின் சிந்தனை.! இலங்கை அரசுடன் விடுதலைப் புலிகள் மேற் கொண்ட பேச்சுவார்த்தைகளின போது கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்த ஒரு விடயமும் அரசால் அமுலாக்கப்பட வில்லை. எந்த ஒரு உருப்படியான யோசனையும் செயல்வடிவம் பெறவில்லை. விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்குரிய ஆலோசனை வரைவைக் கூட இலங்கையின் தலைமைப் பீடம் ஏற்றுக் கொள்ளவில்லை. சுனாமிப் பேரழிவை எதிர்கொள்வதற்காக மனிதாபிமான ரீதியில் உருவாக்கப்பட்ட பொதுக் கட்டமைப்பிற்கு கூட இடைக் காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளது. இலங்கை இராணுவத்தினாலும் அதன் அரசினாலும் மேற்கெள்ளப்பட்ட அரசியல் படுகொலைகளையும் யுத்த நிறுத்த மறல் களையும் விடுதலைப் புலிகள் பொறுத்துக் கொண்டதோடு மேற்கூறிய சிங்களக் கடும் போக்குகளுக்கும் பொறுமையாக முகம் கொடுத்தே வந்துள்ளார்கள்.ஆனால் அதிபர் மஹிந்த ராஜபக்ஷவும் அவரது .பிரதிநிதி களும் உண்மைக்குப் புறம்பான விடயங் களை உலக நாடுகளுக்குச் சொல்ல முனைந்து வருகின்றார்கள். இவ்வளவற்றையும் பேசுபவர்கள் தமிழ்மக்களின் பிரச்சினைகள் குறித்து வெளிநாடுகளில் பேசுவதில்லை. காரணம் அது அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல.!நாம் முன்னர் கூறியது போல் அரசு ஓர் இராணுவத் தீர்வை முன்வைத்துத்தான் தனது காய்களை நகர்த்தி வருகின்றது. உள்நாட்டில் இராணுவ வன் முறைகளையும் மென் தீவிர யுத்தத்தையும மேற்கொண்டுள்ள இலஙகை அரசு வெளிநாடுகளில் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளிலும் இறங்கியுள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதற்கான பல செயற்பாடுகளை அரசு இவ்வாறு தொடர்ந்து செய்து வருவதானது கவலையை தரக்கூடிய விடயமாகும்.

**நன்றி :- இணையத்தளம்**

பெல்ஜியத்தில் நடைபெற்ற இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தின் போது அரசிற்கு ஒரு விடயம் தெரிவிக்கப்பட்டது. சமாதான ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொண்டபடி ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை அரசு களைய வேண்டும். என்பது தான் அது. □

## இன்று ஒரு தகவல்

# படிப்பு

"அறிவுத் தேவையை விட கவனக்குறைவுதான் அதிக கஷ்டத்தை உருவாக்கிவிடுகிறது" என்று ஓர் அறிஞர் கூறியிருக்கிறார்.

அதனால் ஏட்டுப்படிப்பும் வேண்டும். அனுபவப் படிப்பும் வேண்டும். இவை இரண்டும் இருந்தால் தான் வாழ்க்கைச் சக்கரம் சுலபமாக ஓடும்.

இன்று படிப்பதற்குத் துணையாக நிற்பவை புத்தகங்கள். பள்ளிக்கூடத்தில் சரியாகப் படிக்காவிட்டால் தலையில் இருப்பது மூளையா? களி மண்ணா? என்று கேட்பது வழக்கம். ஆனால் முதல் புத்தகமே களிமண்ணாகத்தான் இருந்தது என்பதை நினைத்து ஆறுதல் அடையலாம்.

ஆமாம்! புத்தகங்கள் முதலில் களிமண் சுவடியாகத் தான் ஆரம்பித்தன. எங்கே? மொசப்பத்தேமியாவில்! களிமண்ணில்தான் எழுத்துக்களைப் பதித்தார்கள். அதன் பின்பு கட்டையில் பதித்தார்கள்.

பின்பு கல்லில் பதித்தார்கள். இப்போது அச்சாகவே பேப்பரில் பதிக்க ஆரம்பித்து விட்டோம். பேப்பரில் பதிப்பவை எல்லாம் நெஞ்சில் பதிகிறதா என்பதுதான் கேள்வி.

அது இருக்கட்டும். களிமண் படிவத்தில் பெரிய காப்பியங்களைக் கூடப் பதிவுசெய்து வைத்திருந்தார்களாம். பேப்பரில் எழுதும் பழக்கம் எகிப்தில் ஆரம்பமானது. Cyprus papyrus என்று ஒரு செடி.

அதிலிருந்து papyrus செய்து அதில் எழுதினார்கள். இது வெளிநாடுகளுக்குக் கூட ஏற்றுமதி ஆனது.

ஒருமுறை எகிப்து மன்னர் இன்னொரு நாட்டு மன்னரிடம் சண்டை போட்டுக்கொண்டு இந்த ஏற்றுமதியை நிறுத்தி விட்டார். உடனே அந்த நாட்டு மன்னர் யோசித்தார்.

தோலில் எழுத ஆரம்பித்துவிட்டார். கால்நடைகளின் தோல் இதற்கு உபயோகப்பட்டது. இன்று நாம் வலது பக்கமாக ஆரம்பித்து இடதுபக்கமாக படித்துக்கொண்டு போகிறோம் அல்லவா? 14 ஆம் நூற்றாண்டில் கிரேக்கர்கள் தான் இதற்கு வழிகாட்டினார்கள்.

15ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியர் ஒருவர்தான் அச்சடிக்கும் முறையைக் கண்டுபிடித்தார். இன்று நிறையப் புத்தகங்களை அச்சடித்துக் கொண்டிருக்கிறோம். அதைப் படிக்கிறார்களா? இல்லையா? என்பது பற்றிக் கவலைப் படாமல் அச்சடிக்கிறோம்.

Bacon என்ன சொல்கிறார் தெரியுமா? "சில புத்தகத்தை சுவைக்க வேண்டுமாம். சிலதை விழுங்கிவிடவேண்டுமாம் சிலதை ஜீரணம் செய்து விடவேண்டுமாம்". இப்படிச் சொன்னால் அதை அப்படியே அர்த்தம் செய்து கொண்டு ருசி பார்க்க ஆரம்பித்துவிடக்கூடாது.

அவர் புத்தகம் என்று சொன்னால் அதில் கூறப்பட்ட கருத்தை சுவைக்க வேண்டும் என்று அர்த்தம். படிப்பது வேறு சுவைப்பது வேறு.

படிக்க வேண்டிய சில இருக்கிறது. பார்க்க வேண்டிய சில இருக்கிறது. கற்கவேண்டிய சில இருக்கிறது. திருக்குறளைக் கற்றேன் என்று கூற வேண்டும். திருக்குறளைப் பார்த்தேன் என்று சொல்லக் கூடாது.

ஏதோ புரட்டிப் பார்த்து விட்டு தூக்கிப்போட்டது போல் ஆகிவிடும்.

தினசரிப் பத்திரிகை வாங்குகிறோம். பேப்பர் பார்த்தேன் என்று சொல்கிறோம். இன்று பேப்பர் வாங்கிக் கற்றேன் என்றா சொல்வது? நூறு, இருநூறு வருடங்களுக்கு முன்பு கூட யாராவது இறந்தால் அவர்கள் படிப்பார்கள் என்ற நம்பிக்கையல் சில புத்தகங்களையும் சேர்த்து புதைப்பது சில நாடுகளில் வழக்கமாக இருந்தது.

நமது ஊரிலும் சிலர் செத்தால் புத்தகம் வைத்துப் புதைத்தால் பரவாயில்லை போலிருக்கும். இருந்தவரைதான் எதையும் படிக்கவில்லை.

இனியாவது படி என்று சொலவதுபோல. இவ்வளவும் ஏன் சொல்கிறேன் என்றால் படிப்பு மிகவும் முக்கியம் என்பதைக் கூறத்தான். படிக்கின்ற பிள்ளைகளுக்கு ஒரு வார்த்தை. உங்களுக்குப் பரீட்சை நெருங்குகிறது நன்றாகப் படியுங்கள்.

பரீட்சை வருகிறது என்றால் சிலர் அடுத்தவர்களை நம்பி இருப்பதும் உண்டு.

அது மிகவும் தவறு. ஒருவர் அப்படித்தான் அடுத்த வீட்டுக்காரரிடம் சொன்னார் "சார்! பரீட்சை வருகிறது. உங்கள் மகனை நன்கு படிக்கச் சொல்லுங்கள்" என்றார்.

"என் மகன் மீது உங்களுக்கு அவ்வளவு அக்கறையா?" என்றார் அவர். "அதற்கில்லை சார். உங்கள் மகனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து தான் என் மகன் பரீட்சை எழுதுவான் அதனால் சொன்னேன்" என்றார் இவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தமிழ் மக்களைத் தாக்குவோரை தண்டியுங்கள்! முஸ்லிம் மக்களிடம் புலிகள் வேண்டுகோள்

(அம்பாறை )

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் முஸ்லிம் உறவுகளை சீர் குலைக்கும் முயற்சிகளில் சில தீய சக்திகள் முனைப்புடன் ஈடுபட்டுவருவதாகவும், கடந்த சில நாட்களாக அம்பாறை முஸ்லிம் பகுதிகளூடாக பல்வேறு தேவைகள் நிமிர்த்தம் செல்லும் தமிழ் மக்களின் உயிர்கள், உடமைகள் சில குறிப்பிட்ட தீய சக்திகளால் வேண்டும் என்றே பாதிப்பிற்கு உள்ளாக்கப்படுகின்றமையை கண்டித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறையினர் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் அம்பாறை மாவட்டத்தில் அண்மைக் காலங்களில் முஸ்லீம் பிரதேசங்களில் குறிப்பாக அக்கரைப்பற்று முஸ்லீம் பிரிவு மற்றும் மருதமுனை போன்ற இடங்களில் தொழில் நிமிர்த்தம் வரும் தமிழ் மக்களுக்கு துப்பாக்கிச் சூடும், பொருள் அபகரிப்பும், சொத்துக்கள் நாசப் படுத்தபடலும் நிகழ்ந்து வருகின்றன. இவை அனைத் தும் முஸ்லீம் இளைஞர்கள் ஒரு சிலரால் ஏற்படுத் தப் பட்டுள்ளது. இவை இன்று ஒரு நாகரீக மற்ற தேவையற்ற செயலாகும். எனவே வன்மையாக இதை நாங்கள் கண்டிப்பதோடு இன்று தமிழ்பேசும் மக்களாகிய எமக்கு! எமது தாயகப் பிரதேசங்களில் அமைதியான வாழ்வும், எமது தேச விடுதலையுமே முக்கியமானது. இவற்றிற்காக நாம் அயராது உழைக்கின்ற இக்காலகட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் வாழ்வை ஒற்றுமையை சீரழிக்க எடுக்கப்படுகின்ற தேவையற்ற முயற்சிகள் முறியடிக்கப்படவேண்டும். மேற்படி பிரதேசங்களில் தொடர்ச்சியாக ஏற்படுத்தப்படுகின்ற இச்செயல் களில் ஈடுபடுபவர்களை நீங்கள் தண்டிக்கவேண்டும். அக்கரைப்பற்றில் வைத்தியரிடம் மருந்தெடுக்கச் சென்ற இரு இளைஞர்களின் உந்துருளிகள் துப்பாக்கி முனையில் பறிக்கப்பட்டு பின் காவல்த் துறையினரால் மீட்கப்பட்ட சம்பவம், அக்கரைப் பற்றில் கோயில் ஐயர் சுடப்பட்டு உந்துருளியும் அவர் அணிந்திருந்த நகைகளும் கொள்ளையி டப்பட்ட சம்பவம், மருதமுனையில் சலூன் கடை உடைக்கப்பட்ட சம்பவம், அக்கரைப்பற்றில் சோளன் விற்கச்சென்றவர் சுடப்பட்ட சம்பவம்மேற்படி சம்பவங்களில் ஈடுபட்டோரை நாங்கள் தண்டிக்கும் போது அதை சமூகப்பிரச்சினையாகவும் தம்மை அப்பா விகளாகவும் காட்ட முனைகின்றனர் சிலர். இதனால் இங்கு சமூக உறவும், ஒற்றுமையுமே சீரழிகின்றன. வெறுப்புகளே ஏற்படுகின்றன. எனவே இச்செயல் களில் ஈடுபடுபவர்களை முஸ்லீம் பெரியோர்கள், கல்விமான்கள், சம்மேளன முன்னோடிகள் முன் வந்து இனங்கண்டு தண்டிக்க வேண்டும் என்பதை அன்போடு வேண்டி நிற்கின்றோம்.

தமிழ் பேசும் மக்களாகிய எமக்கு! இன்று ஒற்றுமையும் அடிமைப்பட்ட வாழ்வில் இருந்து விடு தலையுமே முக்கியமானது என்பதையாவரும் புரிந்துகொள்ள வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# நீதிமன்ற பதிவாளர்களுக்கு 'மார்ச்' இல் இடமாற்றம்

வடக்கு-கிழக்கு மாகாண நீதிமன்ற பதிவாளர்கள் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கான நடவடிக்கையை நீதிச் சேவை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. இதன் கீழ் 8 பதிவாளர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

அம்பாறை மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் க.பிரேமச்சந்திரன்,கல்முனை மாவட்ட நீதிமன்றத்திற்கும் கல்முனை மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் எம்.எஸ் நசீர்,திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்திற்கும் இடமாற்றப்படவுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் சா.சிவகுமார் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்திற்கும் அங்கிருந்த பதிவாளர் த.இராஜரெட்ணம் மட்டக்களப்பு நீதிமன்றத்திற்கும் இடமாற்றப்படவுள்ளனர்.

வவுனியா மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் எஸ். சுரேந்திரன் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்திற்கும் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் எஸ். மீரா பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்திற்கும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் மார்க்கண்டு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்திற்கும் இடமாற்றப்படவுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற பதிவேட்டறைப் பதிவாளர் திருமதி தி.யோசப் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்திற்கும் இடமாற்றம் செய்யப்படவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## வைத்தியசாலை ஊழியர் மீது தாக்குதல்!

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை ஊழியரை நோயாளியின் உறவினர் ஒருவர் கடுமையாகதாக்கியுள்ளார். நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் பிரான்சி கில்சன் (வயது-34) என்பவரே இவ்வாறு கடுமையாகத்தாக்கப்பட்டவராவர்.

இவர் 28 ஆம் வாட்டில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தையடுத்து வைத்தியசாலை ஊழியர்கள் நேற்று முன்தினம் ஒரு மணித்தியாலம் வரை அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-132,133)

## கடற்படையினர் மீது தாக்குதல்; அரசாங்கம் கடும் கண்டனம்

(வவுனியா)

செட்டிக்குளம் பிரதேசத்தில் கடற்படை வாகனத்தின் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலை அரசாங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.


மதவாச்சி-மன்னார் வீதியில் கடற்படை வீரர்களை ஏற்றிச் சென்ற பஸ் வண்டி மீது கடந்த வியாழக்கிழமை மாலை தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் கடற்படை வீரர்கள் 9பேர் கொல்லப்பட்டார்கள் . 8பேர் காயமடைந்தார்கள். காயமடைந்த பலரது நிலை கவலைக்கிடமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகளை முன் நோக்கி நகர்த்தும் நோக்கத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசியல் கட்சிகளுடனும் அனுசரனையாளர்களுடனும் கலந்து ஆலோசித்து இதய சுத்தியுடன் பாடுபட்டு வரும் இவ் வேளையிலேயே இத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக அரசாங்கத்தகவல் திணைக் களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது . இந்தத் தாக்குதலில் பலியான படைவீரர் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (க-7)









நேறறு திறந்து வைக்கப்பட்ட கலைக் கோட்ட கட்டடத்தினையும் நிகழ்வில் கலந்துகொண்ட கிறிஸ்தவ மதகுருமார்களையும், மக்களையும் ஆர்வலர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்- அலுவலக நிருபர்)

# புத்தாண்டுப் பலன்கள் உங்களுக்கு எப்படி?

(தொடர்ச்சி....)

## பன்னிரு இராசிகளுக்கும் ஜுலை மாதத்துக்குரிய பலன்கள்

| | | | |
|---|---|---|---|
| ரா | | சு | சூ பு |
| | ஜுலை ராசி நிலை | | சனி செ |
| | | | சந் |
| | | குரு | கே |

### துலாம்
(சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3)

சகோதரர்கள் அல்லது சகோதரிகளின் பிரச்சினை முக்கிய இடம்பெறும் மாதம். ஆரம்பத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் சில மறைந்துவிட்டன. குடும்பத்தில் சுமூகமான நிலையைப் படிப்படியேதான் காணமுடியும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு இதேபோன்று மாத ஆரம்பத்தில் அலுவலகத்தில் ஏற்பட்ட சிக்கல்கள் மேல்மட்ட மனிதர் வரை போய்விடும் என்றாலும், மத்திமப் பகுதிக்கு மேல் மனபேதத்துடன் நின்றுவிடும். பெரிய பாதிப்புகளுக்கு இடம் இல்லை. தீமைகள் குறைந்துவிட்டன என்பதை அறிவிக்கின்றன. குடும்பப் பிரச்சினைகள் ஓர் அளவு திருப்தியாக இருந்தாலும் வெளிவட்டாரம் உங்களுக்கு அலைச்சல் உடையதாக இருக்கிறது. 5இல் ராகுவால் நீங்களே முயன்ற வழி சுகம்தான் இருக்கிறது. உஷ்ண அசௌக்கியம் இடை இடையே இருக்கும். பின்பு தொழில் வழி மாற்றம் அவசியமாக இருக்கும். சிலர் இடம்மாறுதல் செய்து தொழில் அமைத்தல் கூட்டு முயற்சியில் ஆதாயமும் உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் மிதமான போக்குதான் இருக்கும். பூர்வீகச் சொத்து முயற்சியில் ஆதாயமும் உண்டாக்கும். கொடுக்கல், வாங்கலில் மிதமான போக்குதான் இருக்கும். பூர்வீகச் சொத்து ஆபரணம் இந்த வகையில் சில மாற்றங்களும் அவசியம். உத்தியோகத்திற்கு முயற்சி செய்தவர்களும் உத்தரவு கிடைக்கப் பெறுவார்கள். சிலர் அந்நிய நாட்டுப் பிரயாணத்தை மேற்கொள்வதும் குறிப்பிடத்தக்கது. புத்திரர், புத்திரியர்கள் வகை அவசரச் செலவுங்கூட இருக்கும். சிலருக்கு புது இல்லம் குடிபோவது உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் மந்தமான நிலை படிப்படியே குறைந்துவிடும். இழந்த கௌரவத்தை மீண்டும் பெற உங்கள் முயற்சி அதிகமாகும். கௌரவச் செலவுகள் அதிகமாக உள்ள காலமிது. திசா, புத்திகள் நன்றாக இருப்பின் லாட்டரி, போட்டி, பந்தயம், விளையாட்டு வகைகளும் உங்களுக்கு அனுகூலமாக வந்துவிடும். அரசியல், அரசாங்க வகைகளும் உங்களுக்கு அனுகூலமாக வந்துவிடும். உடன் இருப்பவர்கள் உங்களை பேசியே கெடுத்துவிடுவர் எச்சரிக்கை. பிரயாணம் திடீரென்று தடையாகும். புத்திரர், புத்திரியர் வகையில் மருத்துவச் செலவு இருக்கிறது. சிலர் குடியிருக்கும் இடமாற்றத்தைப் பெறுவது குறிப்பிடத்தக்கது. பணம் நெருக்கம் படிப்படியே உறவினர் வழியை விட வெளிவட்டாரம் சிறப்புமிக்கது. சிலசமயம் சுகம் அனுபவிப்பதும் வெளியில் இருக்கும் புதிய நண்பர்கள் சிலரை சேர்க்கவேண்டிய காலமிது. பிரயாணச் செலவு, கௌரவச் செலவு உங்களை விடாது. உத்தியோகப்பிரிவு மனிதர்களுக்குப் பதவியில் மாற்றம், பிறரால் பாராட்டு இடமாறுதல் உண்டு. சிலருக்கு திருமணம் போன்ற சுபம் ஏற்றலும் உண்டாகும். எழுத்துவகையில் அயல் நாட்டுத் தொடர்பு பாதிக்காது. குடும்ப மேன்மையுண்டு. காணாமற் போனவைகளும் கிட்டும். ஏழரைச் சனி யால் தேகசுகம் பாதிக்கவல்லது. சுப விஷயம் குறித்து பேசுவது முயற்சிப்பதும் உண்டாகும்.

### விருச்சிகம்
(விசாகம் 4, அனுஷம், கேட்டை)

உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு செய்தொழில் மூலம் நல்ல போக்கு ஊண்டாகும். இந்தச் சனி நீண்ட எல்லையைக் கடந்துசெல்ல வேண்டி இருக்கிறது. ராகு உங்களுடைய நட்பு கிரகம். சனியும் உங்கள் போக கிரகமாக இருப்பதாலும் உங்களுக்கு கௌரவ சிகரமாக இருப்பதாலும் உங்களுக்கு உயர்வு அளிப்பான். செய்தொழில் வகையில் தனவரவு பெருக்கத்தால் கடன் குறையும். காலம் கடந்து நடந்துகொண்டிருக்கும் வழக்கு வெற்றி முகத்தை நோக்கி நிற்கும். மனக் குழப்பத்தையும் போக்கத்தக்கவன். மறைத்திருந்த ரகசியங்களை வெளியில் கொண்டுவருவீர்கள். இயந்திரம், வாகனம் மூலம் போகங்களும் அனுபவிக்கத்தக்க காலம் இது. கௌரவ உயர்வு பாராட்டுகளும் எல்லா வகையிலும் இணக்கமான போக்கில் இருப்பது மகிழ்ச்சி தருவதாகவே இருக்கும். புதுமனை புகுதல், கட்டட சேர்க்கையும் சிலருக்கு குறிப்பிடத்தக்க நன்மைகளாகும். நண்பரையும் உடன் வைத்திருப்பீர்கள். சில புதிய வழிமுறைகளையும் பின்பற்றவேண்டிய நிர்ப்பந்தம் இப்போது இருக்கிறது. உங்களை பழைய கடன் விடவில்லை. சிலசமயங்களில் மற்றவர்களால் கௌரவக் குறைவான வார்த்தைகள் இருந்துகொண்டே இருக்கிறது. இதை நீங்கள் பொருட்படுத்தாமல் செல்ல இருக்கிறது நன்மை. இப்போது எடுத்த காரியம் தொடர்ந்து வெற்றியைக் கொடுக்கத் தவறாது. தூரதேச மனிதர்கள் தொடர்பும் இப்போது உங்களுக்கு சுவை உடையதாக இருக்கும். குடும்பம், குழந்தைகள் இந்தவகை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் உடையவர்களாயிருப்பர். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு இரு வழி தனவரவு உண்டாகும். கணவன், மனைவியின் ஆரோக்கியத்தில் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். புத்திரர் புத்திரியர்கள் கல்வி மேன்மையும் குறிப்பிடத்தக்கதாகும். பூர்வீகப் பொருட்கள் விற்பது அல்லது மாற்றி அமைப்பதும் உண்டாகும். கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு கவர்ச்சிகரமான கடிதம் வரும். கடைசிப்பகுதியில் போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழிகளில் பண ஆதாயம் இருக்கிறது. அரசாங்கம், அரசியல் வழி மனிதர்கள் இப்போது இணக்கமான போக்கில் இருப்பதால் உங்கள் எழுத்து வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். மறைந்திருந்த விஷயங்கள் நன்மை பெறும் மாதம். உங்கள் வாகனத்தை மாற்றி அமைத்தல் அல்லது அது வழி செலவுகளை எதிர்நோக்க வேண்டியவர்கள் நீங்கள். திருமணம் போன்ற சுப காரியங்களை முடிக்கவும் முடியும். பழையபடி உங்கள் இயக்கம் வேகம் உடையதாக இருக்கும்.

### தனுசு
(மூலம், பூராடம், உத்தராடம் 1)

இப்போது குரு வக்ரம் ஆகிவிட்டான். எழுத்து மூலம் செய்யும் முயற்சிகள் இப்போது பயன்படாது. தேக உஷ்ணம் அசௌகரியம் சிலருக்கு மூலச் சூட்டினால் பாதிப்பு ஏற்பட்டு தீரும். குழந்தைகள் தேகசுகம், கல்வி வளர்ச்சி இவைகள் பாதிக்கப்படாது. கலைப்பிரிவு மனிதர்கள் தொழில் நிமித்தம் அலைச்சல். ஆரோக்கியத்தில் சற்று அதிகமாக கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். உங்கள் பலவீனம் மற்றும் உங்கள் தொழில் ரகசியத்தைக் காப்பாற்ற வேண்டும். வாகன பழுது செலவும் உண்டாகும். லொறி, கார் இயந்திரத் தொழில் நடத்துகிறவர்களுக்கு அது வழி எதிர்பாரா செலவுகள் அதிகமாக இருக்கும். விவசாயிகளுக்கு இயந்திரக்கருவி வாங்குவது, குடும்பத்திற்கு நாகரிப் பொருட்கள் வாங்குவது போன்ற நன்மைகள் இருக்கும். வார்த்தையோடு நின்றிருந்த வழக்கு விஷயங்கள் சில உருவகத்திற்கு வந்து விடும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழிகளும் பிரகாசமடைய ஆரம்பித்து இருக்கின்றன. புண்ணியஸ்தல பிரயாணம், உறவினர் சந்திப்பு போன்ற நன்மைகள் இருக்கின்றன. பற்றாக்குறையை தீர்க்கவும் முடியவில்லை. உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு எதிலும் மனோதைரியம் அதிகரிக்கும். எழுத்து வகை விசேடங்கள் உவகை அளிப்பதாக இருக்கும். திருமணம் போன்ற சுப விசேடங்கள் உறவு இல்லங்களில் நடப்பதும் விருந்து உண்பூதும் இன்னும் இதர மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளும் இடம் பெறும் காலம். மேலும், சொத்து வகையில் விட்டு வைத்த சிக்கல் சில இப்போது தலைதூக்க ஆரம்பித்து இருந்தாலும் அமைதியான முறையில் தீர்த்தல் மன அயர்வைப் போக்கும். மற்றவர்கள் மறைமுகச் செயல் பயன்படாமல் போய்விடும். கொடுக்கல், வாங்கல் தொழில் வகைக்கு கௌரவத்தை உண்டாக்கும். அரசாங்க மனிதர்கள் அரசியல் வட்டாரத்தினர் மிகவும் இணக்கமாக இருப்பது எதிலும் திருப்பதியாக இருக்கும். எழுத்து ஒப்பந்தம் போன்றவைகளும் ஆதாயமானதே. பிரயாணங்கள் அடிக்கடி இடம்பெறும். குடும்பப் பெண்மணிகளுக்கு நற்செய்தி அறிதல், சுப விசேடங்களில் கலந்துகொள்வதும் விருந்துண்டதும் முக்கிய அம்சமாகும். உறவினர் பந்தங்களை புதுப்பிப்பதும் உண்டாக இருக்கிறது. அவசரப் பிரயாணம் இருக்கிறது. அதேநேரம் சிலருக்கு அது அயல்நாட்டு பிரயாணமாகவும் இருக்கும். மூத்தவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பதை உணரலாம். மூத்தவர்கள் தொழில் வழி கணக்கில் சுணக்கமின்றி சென்றுகொண்டே இருக்கும். தேக சுகம் திருப்தியானது. அலுவலக சூழ்நிலையும் மற்றவர்கள் அன்பை வளர்ப்பதாக இருக்கும். மாணவ, மாணவிகள் உல்லாசப் பிரயாணத்தை மேற்கொள்ளும் காலமிது. சிலருக்கு காதல் வெற்றி, குடும்பம் அலைச்சல் போன்றவையும் இருக்கும். இது அவிட்டம் நட்சத்திரம் உடையவர்களுக்கு பல வழி நன்மைகளும் இருக்கும். சதயம் நட்சத்திரம் உடையவர்களுக்கு இக்காலம் நன்மை, வம்பு முரண் வழக்கும் தோன்றக்கூடும். களவு போதல், விபத்து மூலம் நட்டம் போன்றவைகளும் இருக்கும்.

### மகரம்
(உத்தராடம் 2 ,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 )

இப்போது வழக்கு, கடன் போன்றவற்றில் நிதானமாகச் செயல்பட வேண்டும். பட்டாடை, பழைய ஆபரணச் சேர்க்கையும் இந்தப் பிரிவு பெண்களுக்கு இருக்கும். பதவி உயர்வு சம்பந்தமான முயற்சியில் சிலர் இருப்பர். இது முக்கிய நன்மையாகும். புத்திரர், புத்திரியர்கள் கல்வி உயர்வுக்கு குறை இல்லை. கலைப்பிரிவினர்களுக்கு கண்ணியத்தைக் காக்க கொடுக்கல், வாங்கல் சீர் அமைக்க இது ஒரு வாய்ப்பான காலம். உஷ்ணம் நிறைந்தவராக இருப்பீர். காரணம், சனி இந்த நிலை மாதம் முதலில் இருக்குமே தவிர நாளுக்கு நாள் படிப்படியே குறையும். உறவினர் இல்லம் சென்று விருந்து கொள்ளவேண்டி இருக்கும். தொழில் வகையில் புதிய ஒப்பந்தம் செய்வது பூமி, வீடு வகையில் ஒப்பந்தம் செய்வதும் உண்டாகும். வழக்கு இருப்பின் முடிவு இப்போதைக்கு இல்லை. தொடர்ந்துகொண்டே இருக்கும். காதல், நட்பு வகைக்கு மிகவும் இணக்கமான சூழ்நிலை இருக்கிறது. தனநிலையில் தட்டுப்பாடு இல்லாவிட்டாலும் முக்கிய செலவுகள்தான் அதிகமாகும். தாய் வழியில் நடக்கும் சுப விஷயங்களுக்கு பிரயாண முக்கியத்துவம் உண்டாகும். தூரதேச கடிதம் வருவது, பழைய விஷயங்கள் சிலவற்றை புதுப்பிக்க உதவியாக இருக்கிறது. பூர்வீக சொத்து, கட்டிய கட்டடம் இவைகளில் முக்கியமாக மாற்றம் செய்யவேண்டி வரும். பெண்களை முதன்மையாக வைத்து எழும் பிரச்சினைகளும் முக்கியம் வாய்ந்தது. எனவே, உங்கள் கௌரவத்தில் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். எழுத்து ஒப்பந்தம் போன்ற நன்மைகள் சிலதும் உண்டாக்கும். நீங்கள் தனித்து இயங்குவதைவிட கூட்டு முயற்சியில் இயங்குவது பலன் தருவதாக இருக்கும். குடும்பச் சொத்து விவகாரங்கள் இருப்பவர்கள் சற்று அலைச்சல் உடையவர்களாக இருப்பார்களே தவிர, காரிய சாதனை நிற்காது. ஆனால் வழக்கு மட்டும் முடிவு பெறாது. வார்த்தையளவில் நின்ற காரியங்களை செயல்முறைக்கு கொண்டு வந்து விடுவீர்கள். இது பிற்பகுதியில்தான் சாத்தியமாகும். உறவினர் வருகை குடும்பத்தில் சுபச் செலவுகளை உண்டாக்கும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு விருப்பம் இல்லாத கடிதம் வருவது இலாகா மாற்றல் உத்தரவை பெறுவது போன்றவைகள் இருக்கும். குழந்தைகள் ஆரோக்கிய வகையில் சிறுசிறு பாதிப்பும் மருந்து செலவுகளும் இருக்கும். பெண்களுக்கு இப்போது வந்திருப்பது புது இடம்தான். சில வகையில் மனத்திருப்தி இல்லாமல் இருக்கின்றன என்றாலும் உடன் இருப்பவரை இதமாக சரிகட்டிப் போகவேண்டும். அலைச்சல் அதிகம். வழக்கு வகை நீங்கள் முயன்றும் நல்ல போக்கை விரும்பியும் அவர்கள் ஒன்றுபட்டு வரவில்லை. இதர வழக்கு இருந்தாலும் அப்படியே இழுத்துக்கொண்டே போகும். ஒரு முடிவுக்குக் கொண்டுவர முடியாது. உறவினர் விலகித்தான் இருப்பர். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு தொழில் கௌரவம் உயரும். இயந்திரக் கருவி வாங்குவது குடும்பத்திற்கு நாகரிகப் பொருட்கள் வாங்குவது போன்ற நன்மைகள் இருக்கும். வார்த்தையோடு நின்றிருந்த விஷயங்கள் சில உருவகத்திற்கு வந்துவிடும்.

### கும்பம்
(அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 )

இக்காலம் ராகு குடும்பத்திலும், குரு வக்ரம் பெற்று இருப்பது நன்மை இல்லை என்பதால் கடுமையான போக்குதான். கடன் இருக்கிறதே என பயப்படவேண்டாம். தொழில் வளர்ச்சிக்கு இது முக்கியம்தான். ஜனனகால திசை நன்றாக இருப்பின் பதவி உயர்வும் உண்டாகும். கட்டட மனை வாங்குவது, கட்டடம் கட்டுவது குறிப்பிடத்தக்கது. நல்ல தூக்கம், நல்லுணவு கொள்வது எல்லாம் உடனுக்குடன் பூர்த்தியாகி வந்துவிடும். திடீர் பிரயாணம் உள்ள காலமிது. சிலர் தேடிக்கொண்டு போன நேரத்தில் கிடைக்கவில்லை. ஆனால், இப்போது அவர்களே உங்களைத் தேடி வருவர். வீட்டில் விருந்தோடு ஆரம்பமாகும் காலமாக இருக்கிறது. செய்தொழில் வகையில் சோர்வின்றி செயல்படுவீர்கள். உங்கள் சொல்லுக்கு மதிப்பு வாய்ந்த காலம் என்பதிலும் சந்தேகம் இல்லை. தனநிலை, அவசர பிரச்சினையெல்லாம் தீர்ந்துவிடும் அளவு இருக்கிறது. குடும்பத்தில் சுப விசேடங்கள் இடம்பெறுதல் விருந்துண்பதும் இருக்கும். அரசியல் மனிதர்களின் சந்திப்பு காலம் கடந்த சில பிரச்சினைகளை முடிக்க உதவியாக இருக்கும். பெண்களுக்கு புது உடை, அணிகலன்கள் சேர்க்கையும் உண்டாகும். நீங்கள் தொழில் வழியில் பலம்மிக்கவர்களாக இருந்தபோதிலும் பணம் தட்டுப்பாடு இடை இடையே இருக்கத்தான் செய்யும். சனியை தாண்டி வந்திருக்கிறீர்கள். முன்பு ஏற்பட்ட வழக்கு வகை எல்லாங்கூட இனி திருப்தியாக முடியும். குழந்தை பிறப்பு மகிழ்ச்சியும் உண்டாகும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு பதவி உயர்வைக் கொடுக்கும். ஆனால் இப்போது அல்ல. பதவி மாற்றம் உயர்வு போன்ற தகவல் கிடைக்கும். பிரயாணம் முக்கியத்துவம் உள்ள காலமே. தன் உயர்வுக்கு வேண்டி உயர் அதிகாரிகளைச் சந்திப்பது சுமூக பேச்சு வார்த்தையும் உண்டாகும். உங்களுக்கு அவ்வளவு சிறப்பாக இல்லை. குரு மட்டுமே நன்றாக இருக்கிறது. ஓய்வுகொள்வதும் அவசியமாக இருப்பது உங்களை வெற்றி உடையவராக ஆக்கும். வாகன வகையில் இருந்த சிக்கல் தீர்க்கப்பட்டுவிடலாம். சத்ருக்களாக இருந்தவர்கள் அவசியமாக சமாதான முயற்சிக்கு வருவதால் உங்கள் எதிரியாக இருந்தவர்கள் ஏமாற்றம் அடைவர். உறவினர் சந்திப்பு, சுப விஷயப் பேச்சுக்களும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதாகும். இந்த மாதம் முழுவதும் நீங்கள் சொந்த வேலைகளைக் கவனிப்பது சிரமமாகும். உத்தியோகப் பிரிவு ஆண்,பெண்களுக்கு உயர்மட்ட மனிதர்களின் தொடர்பு நெருங்கியதாக இருக்கும். இந்த மாதத்தில் கடித அனுகூலம் கையெழுத்து போடும் வேலைகளும் அதிகமாக இருக்கும். பெண்கள் தேக ஆரோக்கியத்தைக் கவனிக்க வேண்டும். தொழில் சம்பந்தமான இரகசியங்களைக் காப்பாற்ற வேண்டும். கலைப்பிரிவினர்களுக்கு கவனமறதி காலில் காயம் உண்டாகுதல் மருத்துவச் செலவு உண்டாகும். தொழில்வகை கொடுக்கல் வாங்கலில் பாதிப்பு சற்று அலைச்சலையும் உண்டாக்கும்.

### மீனம்
(பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி)

உங்கள் ஆட்சிக்கிரகம் குரு 8இல் இருக்கும் வரை நீங்கள் எதிலும் தைரியமாக செயல்பட முடியாது. திருமணம் போன்ற சுபச் செலவுகள் இல்லை என்றாலும் அவ்வழியில் முக்கியஸ்தர் உறவினர்களைச் சந்திக்கும் அவசிய செலவை உண்டாக்கும். சிலசமயம் கௌரவக் குறைவான வார்த்தைகளும் உண்டாக்கும். இந்த நடுப்பகுதிக்கு மேல்தான் சனிக்கு சாரம் வேலை செய்யும். உறவில் அவ்வப்போது சிறு சிறு சச்சரவுகள் தலை தூக்கி பின்னர் மறையும். புதிய வீடு, மனை போன்ற ஸ்திரச் சொத்துக்களை வாங்கத் திட்டமிடுவீர்கள். உடல் ஆரோக்கியம் நல்லவிதமாகக் காணப்படும். பொருளாதார உயர்வு ஏற்படுவதால் சிலகாலம் நோய் வாய்ப்பட்டிருந்தவர்களும் பரிபூரண ஆரோக்கியத்தை அடைவார்கள். மக்கள் பெருமை, சுற்றத்தார் வருகை, வார்த்தைக்கு மகிழ்ச்சி, பெரியோர் சேர்க்கை, எதிலும் வெற்றி ஆகியவை குறிப்பிடத்தக்கவை. சிலர் வாகனம் வாங்குவது, புது மனை குடிபுகுவது போன்ற பெரிய பொறுப்புக்களில் ஈடுபடுத்திக்கொள்ளப் போகிறீர்கள் என்பதில் மனச்சலனமின்றி இருக்க வேண்டும். மற்றவர் வார்த்தைக்கு செவிசாய்க்க வேண்டாம். குடும்பத்திற்கு புது பொருள் வாங்குவதும் உண்டு. வழக்கு பற்றிய பயம் இல்லை. கடனைக் குறித்து கவலைப்படவும் வேண்டாம். அவை கட்டுக்கடங்கி தான் இருக்கின்றன. உத்தியோகத்தர்களுக்கு தன் குடும்ப வகையில் எல்லாம் நன்றாக இருந்தும் உங்களின் தேகசுகம் கவனிக்கத்தக்கது. நரம்புநோய், இருமல், சீதள பாதிப்புங்கூட இருக்கும். கணவன், மனைவி உறவு நன்றாகவே இருக்கும். வழக்கு உள்ளவர்கள் செலவைத்தான் ஏற்கவேண்டி இருக்கிறது. சகோதர, சகோதரி வகையில் மனத்திருப்தியான போக்கு இருக்கமுடியாது. புத்திரியர்கள் கல்வி மேன்மை இருக்கும். பொதுவாக குடும்பத்தில் சூழ்நிலை அமைதியாக இருக்கின்றது. குழந்தைகள் ஆரோக்கியம் கல்வி நிலையும் திருப்தியாகவே இருக்கின்றன. சிலர் நாகரிக வாகனம், குடும்ப வகைக்கு நாகரிகப் பொருட்கள் வாங்குவதும் இருக்கின்றன. தூரத்துச் செய்தி அவ்வளவு திருப்தியாக இல்லை. சுபவிஷயம் குறித்து எதிர்பார்த்த மனிதர்கள் காலதாமதத்துடன் வந்துசேருவர். பணம் பற்றாக்குறை தொடர்ந்து இருக்கும். பழைய கடன்கள் இருந்தாலும் பாதிப்பு இல்லை. அரசியல் அரசாங்க சம்பந்தமான மனிதர்களின் சந்திப்பு எழுத்துவகை உத்தரவுக்கு உதவியாக இருக்கும். வெற்றிமேல் வெற்றி இருக்கிறது. புது உடைகள் சேர்க்கையும், கௌரவச் செலவும் இருக்கிறது. புத்திரர், புத்திரியர்கள் நிலையில் பெருத்த முன் னேற்றத்தைக் காணும் காலம். சுப விஷயம் குறித்து கடிதங்களும் வாழ்த்துக்களும் வரும் பிரயாணம் குடும்பத்துடன் ஏற்பது தவிர்க்க முடியவில்லை. நீங்கள் எப்போதோ செய்த காரியத்தின் பிரதிபலன் மாதக் கடைசியில் மனச் சலனத்தை உண்டாக்கும்.

(தொடரும்...)

# யாழ்.மக்களை இணைந்து செயலாற்றுமாறு மாநகர ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாண மாநகரசபையின் 2006ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தை விளக்கும் ஊடக வியலாளர் மாநாடு நேற்று முன்தினம் யாழ்.மாநகரசபையில் இடம் பெற்றது. அதில் யாழ்மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம யாழ் மக்களை தம்முடன் இணைந்து செயலாற்றுமாறு வேண்டுகோள் விடுத்தார். மேலும் அவர் கூறிய தாவது;

நடப்பு ஆண்டில் பல்வேறு அபி விருத்தித்திட்டங்கள் உத்தேசிக் கப்பட்ட பொழுதும், அவற்றை முழுமையாக நிறைவேற்ற முடிய வில்லை. எவ்வாறாயினும், நொராட் திட்டத்தின் கீழ் வெள்ள வாய்க் கால்கள் புனரமைப்பு மற்றும் குளங் கள் புனரமைப்பு வேலைகள் பூர்த் தியாக்கப்பட்டன. அதேபோல் கூட் டுப்பசளை உற்பத்தி அகமும் பூர்த்தியாக்கப்பட்டு அதன் செயற் பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இவற்றுடன், சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினர் திருநகர்ப் பகுதி வடிகால் அமைப்பிற்கு 15இலட்ச ரூபாவும், யூபிலி மகப்பேற்று நிலைய புனரமைப்புக்கு 8இலட் சம்ரூபாவும் மொத்தமாக 23இலட் சம் ரூபா நன்கொடையாக வழங்கி யுள்ளனர்.

மாநகரசபையின் நிர்வாக விட யத்தில் ஆளணி விவகாரமும் அதி லும் குறிப்பாக நீண்டகாலமாக தற்காலிக, அமைய அடிப்படை யில் சேவையாற்றுகின்ற தொழி லாளர்களின் நிரந்தரக் கோரிக்கை கள் சம்பந்தமாக காத்திரமான நட வடிக்கைகள் எடுக்கப்பட்டு, சுத்தி கரிப்புப் பகுதித் தொழிலாளர்கள் 60 பேரை நிரந்தரமாக்குவதற்கான அங்கீகாரம் வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளரிடம் இருந்து பெறப்பட்டது. இதற்காக வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா அவர் களுக்கும், வ.கி.மா.உள்ளூராட்சி ஆணையாளர் சபாபதிப்பிள்ளை அவர்களுக்கும் நன்றிகள் கூற கடமைப்பட்டுள்ளேன்.

இதேபோல், மிக நீண்டகால மாக தற்காலிக அடிப்படையில் சேவையாறும் குடும்ப நல உதவி யாளர்களை நிரந்தரமாக்கும் நடவ டிக்கைகளும் எடுக்கப்பட்டு அதற் கான விண்ணப்பங்கள் வ.கி.மா.பிர தம செயலாளர்க்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து வேலைப்பகுதி மற்றும் ஏனைய பகுதி தற்காலிக ஊழியர்களை யும் நிரந்தரமாக்கக்கூடிய சாத்தி யமான நடவடிக்கைகள் 2006ஆம் ஆண்டில் எடுக்கப்படும்.

நடப்பு ஆண்டிலும், அடுத்த ஆண்டிலும் சபையின் வருமானத் தில், போதிய அளவு பராமரிப்புச் செலவுகளுக்கு தேவையான நிதி யைப்பெறுவது சிரமமானதாகவே இருக்கின்றது. உதாரணமாக 2005 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி சுமார் 67இலட்சம் ரூபாவாகும். கிட் டத்தட்ட இந்தத்தொகை வீதிப் பாராமரிப்பிற்கு ஒதுக்கப்பட்டுள் ளது. எனினும், சுமார் 210 கிலோ மீற்றர் வீதிகளை பராமரிக்கவேண் டியநிலையில் இந்நிதியைக் கொண்டு 6 கிலோ மீற்றர் வீதி களை மட்டுமே பராமரிக்க முடியும்.

எனவே, 2006ஆம் ஆண்டில் வீதி பராமரிப்பிற்கென அதிகரித்த நிதி ஒதுக்கீட்டை ஏற்பாடு செய் வது மட்டுமன்றி தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சு, அரசாங்க அதிபர் போன்றோரிடம் இருந்து வீதி பராமரிப்பிற்கு நிதி யுதவி கோரும் நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியுடன் இரண்டு உழவு இயந்திரங்கள் திண்மக் கழிவகற்றும் நடவடிக் கைக்காக கொள்வனவு செய்யப் பட்டன. இவற்றுக்கான இறவைப் பெட்டிகள் சபை நிதியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டன.

இதேபோல் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் உதவி யுடன் நான்கு உழவு இயந்திரங் கள் வழங்குதவற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவை 2006 ஆம் ஆண்டு கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது. இவற்றுடன் திண்மக் கழிவகற்றுவதற்கு **Compact Loader** இயந்திரம் ஒன்றை ஐக்கிய நாடுகள் அபி விருத்தித்திட்ட நிறுவனம் மூலம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.



திண்மக் கழிவு முகாமைத்து வம் தொடர்பான செயலணிகளை அமைத்து, குருநகர்ப் பகுதியை மாதிரியாக எடுத்து, விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக வீடு வீடாகச் சென்று கலந்துரையாடல்கள் நடத் தப்படுகின்றன. நகரத்தில் பல பகு திகளில் குப்பை கூழங்களை கூடு மானவரை குறைக்கும் நடவடிக்கை கள் இவற்றின்மூலம் நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுவதுடன், குறிப் பிட்ட பகுதிகளில் சேதன, அசே தன கழிவுகளைப் பிரித்து பொதி யிடக்கூடிய வகையில் சுற்றாடல் அதிகாரசபை மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம் போன்றவற்றின் உதவியுடன் குப் பைத்தொட்டிகள் அமைப்பதற்கும் பொதிப் பைகள் வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

1986ஆம்ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட தீயணைப்பு இயந் திரம் 20 ஆண்டுக்கு மேலாக இன் றும் பாவிக்கப்பட்டு வருகின்றது. இதனால் முறையான வகையில் தீ விபத்துக்களைக் கையாள்வது பாதிக்கப்பட்டுள்ளதை கவனத்தில் கொண்டு இந்த சேவையை அபிவி ருத்தி செய்யும் முகமாக வரவு-செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் உதவிக ளும் கோரப்பட்டுள்ளன.

இவற்று டன் நகரத்தை அழகு படுத்துகின்ற நடவடிக்கைகளில் புலலுகுளம், ஆரியகுளம், கண் ணாதிட்டிக்குளம், ஆகியன அபி விருத்தி செய்வதற்கும் திட்ட மிடப்பட்டுள்ளது. ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட தனியார் பஸ்தரிப் பிடத்திற்கு தனியார் பஸ்களை மாற்றவும், அவை முனிஸ்வரன் வீதியூடாக பஸ்நிலையத்தை வந் தடையவும் நடவடிக்கைகள் எடுக் கப்படவுள்ளன.

வண்ணான் குளப் பகுதிக்கான முழுயான ஒரு அபிவிருத்தித் திட் டத்தையும், செங்குந்தா சந்தைக் கான ஒரு முழுமையான அபிவிருத தித்திட்டத்தையும், புல்லுகுள பகு திககான ஒரு அபிவிருத்தித் திட் டத்தையும் தயாரித்து வழங்கு மாறு நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரப்பட்டுள்ளது. சின் னக்கடை மேல்மாடிக் கான படிகள் அமைத்து கடைகளை வாடகைக்கு விடவும் நடவடிக்கை எடுக்கப்பட வுள்ளது. நகரில் உடைந்து சிதைந்து போன திறந்த வெளி அரங்கிற்கு பதிலாக ஒரு கலாசார மண்டபம் அமைக்கும் நடவடிக்கையும் 2006 ஆம் ஆண்டுக்கு எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விட யங் களில் தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சின் உதவி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படு கிறது.

இந்த நாட்டிலே தனக்கென ஒரு முழுமையான அடிப்படை வசதிகளைக்கொண்ட ஒரு அலு வலக தொகுதி இன்றி இயங்கு கின்ற ஒரு மாநகர சபையாக எமது நிறுவனம் உள்ளது. சகல வசதி களும் கொண்ட ஒரு மாநகரசபை அலுவலகம் அமைப்பதற்கான நிதி வளம் இச் சபையிடம் இல்லை என்பதால் அதற்கான நிதித் தேட லில் பல்வேறு அனுசரணையாளர் களும் நிதி வழங்குனர்களும் முன் வரவேண்டும் என கோரப்படுகிறது. இவ் விடயங்களை தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சின் உதவி கிடைக்கும் என நம்பப்படு கின்றன. யாழ்.நவீன சந்தை பல ஆண்டுகாலமாக தீந்தை பூச்சு செய்யப்படாமல் இருப்பதை கவ னத்தில்கொண்டு அதற்கான நடவ டிக்கைகளையும் எதிர்வரும் ஆண் டின் முதற்பகுதியிலேயே மேற் கொள்ளுவதற்கான நிதி ஏற்பாடு கள் வரவு-செலவுத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. துரை யப்பா விளையாட்டரங்கில் புரன மைப்பு வேலைகளும் அடுத்த ஆண்டில் துரிதமாக பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிதி வளத்தோடு மாநகரசபை செயற் படுவதால் சகல தரப்பினரதும் உதவியை வேண்டி நிற்கின்ற ஒரு சூழ்நிலையில் இந்த நிர்வாகம் இருக் கின்றது. நகரத்தில் அமுல் செய் யப்படுகின்ற நிலைத்தகு நகராக் கல் அபிவிருத்தித்திட்டம் திறம்பட அடுத்த ஆண்டில் செயற்படுத்துவ தற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

எமது நடவடிக்கைகளை பூர்த்தி செயவது வடக்கு-கிழக்கு மாகாண சபை மற்றும் அரசாங்க அதிபர் போன்றோர் இதுவரை வழங்கிய ஆதரவிற்கு நன்றி தெரிவிப்பதோடு தொடர்ந்தும் அவர்களதும், தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சினதும் ஆதரவினை நாடி நிற்கின்றோம். யாழ்.மாநகரை நோர் வேயின் றொம்சோ மாநகரத்தின் ஒரு இணை நகரமாக்கி செயற்பட வும், அதன் மூலம் யாழ்.நகரின் வடி கால் அமைப்பை முழுயாக சீர மைப்பதற்கான பூர்வாங்க உடன் படிக்கை ஒப்பமிடப்பட்டுள்ளது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக நிர்வாகத்தில் காணக் கூடிய பல குறைபாடுகளையும், கணக்கியல் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டுத் தொய்வுகளை சீர்செய்து சீரிய நிர்வாகத்தையும், சிறப்பான மக் கள் சேவையையும் வழங்குவதற்கு சகல மட்டப் பணியாளர்களின தும், பொது மக்களினதும் ஒத்து ழைப்பை வேண்டி நிற்கிறோம் என மாநகர ஆணையாளர் தெரிவித் தார்.

**எதிர்வரும் ஆண்டுக்கான 28 முக்கிய வேலை அபிவிருத்தித் திட் டங்கள் பின்வருமாறு:-**

நீர்விநியோகத்திட்டம், வீதிகள் வலையமைப்பு, கழிவு நீர் அகற் றல், வாய்க்கால் மற்றும் வடிகால மைப்பு, திண்மக்கழிவு அகற்றல முகாமை, கூட்டுப்பசளை உற்பத்தி மற்றும் சேகரிப்பு உபகரணங்கள் வழங்கல், மாநகர சபை அலுவல கக் கடடடத்தொகுதி, கலாசார மண டபம்-திறந்து வெளி அரங்கிற்குப் பதிலாக, புல்லுக்குளம் மற்றும் ஆரியகுளம் அபிவிருத்தி, கன்னா திட்டிக்குளம், வட்டக்குளம், பாசை யூர் குளம் அபிவிருத்தி, மினிபஸ் நிலைய மாற்றம, நடைபாதை வியா பாரிகள் சந்தை, விளையாட்டரங்கு அபிவிருத்தி, நவீனசந்தை-தீந்தை பூசுதல் மற்றும் மூன்றாம் கட்டக் கட்டட அமைப்பு, சின்னக்கடைச் சந்தை-மாடிப்படி அமைத்தல்.

செங்குந்தாச் சந்தை கடைக் கட்டடத் தொகுதியும் மரக்கறிச் சந்தை மற்றும் மீன்சந்தை, இறைச் சிக்கடை அமைப்பும், தீயணைப் புச் சேவை-மேலதிக இயந்திரம், வண்ணான்குளப் பகுதி அபிவிருத்தி, வீதி விளக்குகள், ஜூபிலி மகப் பேற்றுமனை புனரமைப்பு, நிர்வாக கணனி மயப்படுத்தல், சுப்பிரமணி யம் பூங்கா கிட்டு பூங்கா புனர மைப்பு, குருநகர், திருநகர், நாவாந் துறை சூரியவெளி, பொம்மை வெளி பகுதிகளில் உள்ள நெருக்க மான குடியிருப்பு, தாழ் நிலங்களை அபிவிருத்தி செய்தல், வாவியோர் நில மீட்பு, பொது நூலகத்துக்குத் தீந்தை பூசுதல், பொதுநூலக உண வுச் சாலை திறத்தல், எரிந்த நூல கத்தின் மாதிரியை உருவாக்குதல், மணிக்கூடு கோபுர புனரமைப்பு, நகர நல்லாட்சி எண்ணக்கரு பரப் புரை, ஐ.நா.வதிவிட நிறுவனத்தின் சமூக அபிவிருத்தி திட்டங்கள் 10.

**ஊடகவியலாளர் சந்திப்பில் வலம்புரிக்காக ஆணையாளர் வழங்கிய விசேட செவ்வி பின்வருமாறு,**

***கேள்வி:-*** தாங்கள் குறிப்பிட்ட இவ் அபிவிருத்தி திட்டங்களின் சாத்தியப்பாடு குறித்து என்ன கூறு கின்றீர்கள்.

***பதில்:-*** அண்மைக்காலமாக நாட்டில் பதற்றம் இன்னும் அதி கமாகியுள்ளது. ஆனபோதும் நாங கள இதுபோன்ற ஒரு சூழலில் வாழ முற்றிலும் தயாராக எம்மை மாற் றியமைத்துவிட்டோம். எனவே இந்த திட்டங்களை எவவளவு தூரத்திற்கு நடைமுறைப் படுத்த லாம் என்பதைவிட முடிந்த வரை நடைமுறைக்கு கொண்டுவர முயற்சிப்பதே எங்கள் இலக்கு. அவை நடப்பதும் நடக்காமல் விடு வதும் நாட்டின் சூழலை பொறுத்தே தீர்மானிக்கப்படும் எனவே நாங்கள் எங்கள் பணியில் தொடர்ந்தும் ஈடு படுவோம்.

***கேள்வி:-*** நடைபாதைக்கடை கள், குறிப்பாக யாழ்.வைத்திய சாலையை அண்மித்த பகுதிகளில் இருக்கும் இவைகளால் மக்களுக்கு இடையூறு ஏற்படுவதாக ஒருகருத்து இருக்கிறது, இது பற்றி தாங்கள் என்ன கூறுகின்றீர்கள்,

***பதில்:-*** அது முற்றிலும் உண் மையான ஒரு கருத்தாகும். இதற்கு முன், வைத்தியசாலையிலிருந்து நூலகத்திற்கு செல்லும் பாதை வழியே உள்ள நடைபாதைக்கடை களை அப்புறப்படுத்துதல் வேண் டும் இவற்றுக்குரிய நடவடிக்கை கள் எடுக்கபடவுள்ளன.

***கேள்வி:-*** நடைபாதை கடை கள் போன்றே கடைகளின் விளம் பர பலகைகளும் குறிப்பாக தொலைத தொடர்பகங்களின் விளம்பர பல கைகள் தெருவை அடைத்தாற் போல வைக்கப்பட்டிருப்பதும் போக குவரத்திற்கு தடையாக உள் ளதே?

***பதில்:-*** கடந்த தீபாவளியை ஒட்டி இதற்கான நடவடிக்கைகளை எடுத்தோம். அப்போது இது போன்ற விளம்பரப் பலகைகள் வைத்திருப் பது மக்களின் போக்குவரத்தைப் பாதிக்கும் என்றுகூறி அவை அப் புறப்படுத்தப்பட்டன. ஆனால் தற் போது மீண்டும் இப்பழக்கம் நடை முறைக்கு வந்துவிட்டது. இதற்கு அண்மைக்காலங்களில் "பொலிஸ் சோதனை" இல்லாமல் போனதும் கூட ஒருவகையில் காரணம் எனக் கூறலாம். ஆயினும் இதற்கும் மீண் டும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

***கேள்வி:-*** பாடசாலை, மத தலங களிற்கு அண்மையில் மதுபான விற்பனை நிலையங்கள் இருப்பது தடைசெய்யப்பட்டும் பல மதுபான கடைகள் அப்படியே இருப்பது குறித்து என்ன சொல்லுகிறீர்கள்,

***பதில்:-*** இது ஒரு பிரச்சினை யான விடயம். இது குறித்து நமது அரச அலுவலர் கணேசிடமும் நான் கலந்து பேசியுள்ளேன். இதன் பிர காரம் பல்கலைக்கழகங்களை ஒட் டியிருக்கும் மதுபானக் கடைகளை அபபுறப்படுத்துவதறகான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. தொடர்ந்து வரும் காலப் பகுதிகளில் பாடசாலைகள் மற் றும் மதவழிபாட்டு தலங்களை ஒட் டியிருக்கும் மதுபானக்கடைகளும் அப்புறப்படுத்தப்படலாம்.

***கேள்வி:-*** யாழ்ப்பாண நகர மக் களிடம் நீங்கள் சொல்ல விரும்பு வது என்ன?

***பதில்:-*** எதற்கும் குறைசொல் லும் பழக்கம் நம்மிடையே அழுத் தமாக வேரூன்றிவிட்டது. பெரும் பாலும் என்னிடம் வரும் பலரும் இங்கே குப்பைகள் அதிகம் எங் கள் பகுதித்தெரு சரியில்லை போன்ற குறைகளை கூறுவதற்காகவே வரு கின்றனர். மக்களின் இந்த மனப் பாங்கு மாறவேண்டும்.

**செவ்வி: கிருத்திகா தருமராஜா**

***கேள்வி:-*** ஆனால மாநகர ஆணையாளரிடம் தானே அவர்கள் தங்கள் இல்லாமையை கூற முடி யும் என்பது உண்மைதானே?

***பதில்:-*** அதை நான் மறுக்க வில்லை. ஆனால் அந்தப் பிரச்சி னைகளை தீர்ப்பதற்கு எங்களுக்கு அவர்களது ஒத்துழைப்புத்தேவை. உதாரணத்துக்கு அண்மையில் நல்லூர் செங்குந்தா சந்தைக்கு முன்னால் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள பஸ்நிலையம், புதிய கட்டடத்தொகுதி கட்டப்பட்ட போது இடிக்கப்பட்டதால் அதற் குப் பதிலாக புதிய பஸ்தரிப்பிடம் ஒன்றை கட்டித்தருமாறு அப்பகுதி மக்கள் என்னிடம் வேண்டினார்கள். அவர்களுக்கு நான் இதை ஏன் நீங்களாகவே முன்னின்று செய்யக் கூடாது என்கின்ற ஒரு எண்ணக் கருவை ஏற்படுத்தினேன்.

இப்போது அங்கே புதிதாக ஒரு பஸ்நிலையம் இருப்பதை நீங்கள் காணலாம். இதற்கு என்ன கார ணம்? அப் பிரதேச மக்கள் ஒன்றி ணைந்து ஒரு காரியத்தை செய் ததுதான்.

எனவே மக்களிடமிருந்து பிரச் சினைகள் மட்டுமன்றி அதை எப் படி தீர்க்க முடியும் என்கின்ற மாற்று வழியும் வெளிக்கொணரப்பட வேண்டும் என்பதே என் நோக்கம் ஆகும். ஒரு கூட்டு முயற்சியில் செயயப்படும் எல்லா வேலைகளுமே மிகச் சுலபமாக முடியும். எனவே இதுவரை மக்களுக்கும் நகர சபைக்கும இடையே இருந்து வந்த இடைவெளி குறைந்து அவர் களும் எம்முடன் இணைந்து செய லாற்ற வேண்டுமென்பதே இவ் வாண்டின் ஆரம்பத்தில் விடுக்கும் வேண்டுகோள் அகும்.

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

## மீள்பார்வை 19



ராவண சன்யாசியாக...

எனவே என்னிடம் நீ இப்படியே மெக்கானிக் வேலை கற்றுக் கொண்டு கூடிய சீக்கிரத்தில் நல்லதொரு மெக்கானிக்காக ஆகிவிடலாம். நாடகக் கம்பெனி வேண்டாம் என்று அறிவுரை கூறினார்கள். ஆனால் எனக்கு அதில் சம்மதமில்லை. அரிதாரம் பூசிப் பழகியவனுக்கு வேறு வேலை தெரியுமா? நான் தினமும் மேடையில் லைட்டையே பார்த்துக்கொண்டிருப்பவன், மேக்கப் போட்டுக் கொண்டிருப்பவன், மக்களுக்கு முன்னால் சத்தம் போட்டுப் பேசி நடித்து அவர்கள் கைதட்டலைக் கேட்டு மகிழ்ந்தவன்.

இப்படியிருக்க இந்நாள் எப்படி மெக்கானிக்காக காலம் தள்ளமுடியும்? எனது நண்பன் கூறியது தான் என் மனதிற்கு சரியெனத் தோன்றியது. ஆகையால் அம்மாவுக்கு ஆறுதல்கூறிவிட்டு அந்த



ராஜ்பார்ட் ரங்கதுரை படத்தில் ...(1973)

நாடகக் கம்பெனியில்சேர நண்பனுடன் கும்பகோணம் சென்றுவிட்டேன். அங்கு சென்றால் ஏற்கனவே என்னுடன் சரஸ்வதி கானசபாவில் இருந்தவர்கள் தான் அங்கு நடிகர்களாக இருந்தனர். நான் அங்கு சென்றவுடன் என்னை எல்லோரும் வரவேற்று சந்தோஷமாக வாடா கணேஷா இவ்வளவு நாள் எங்கிருந்தாய்? என்ன செய்து கொண்டிருந்தாய்? என்று கேட்டார்கள். அதற்கு நான் மெக்கானிக் வேலை செய்து கொண்டிருந்தேன் என்றேன். அவர்கள் கூறினார்கள் என்னடா இது ? புடலங்காய் தவளை என்கிற மாதிரியல்லவா இருக்கிறது? உனக்கும் மெக்கானிக் வேலைக்கும் என்னடா சம்பந்தமென்று கூறி என்னை அவர்களுடன் நாடகக் கம்பெனியில் சந்தோஷமாகச் சேர்த்துக் கொண்டார்கள்.

### மீண்டும் நாடகக் கம்பெனி நோக்கி...

டி.எஸ்.என்: நீங்கள் ஏற்கனவே பொன்னுசாமி பிள்ளை நாடகக்கம்பெனியில் இருந்துவிட்டு பிறகு விலகி ராதா அண்ணனுடன் சேர்ந்தீர்கள். மீண்டும் நீங்கள் ஏற்கனவே இருந்த கம்பெனியோடு சேரும் போது உங்களுக்கு ஒரு மாதிரியாகத் தோன்ற வில்லையா?

சிவாஜி:- அப்படியெல்லாம் ஒன்றும் தோன்றவில்லை. ஏனென்றால் அப்பொழுது அந்த நாடகக் கம்பெனி பொன்னுசாமிப்பிள்ளை அவர்கள் கையில் இல்லை. அதை வேறு ஒருவர் வாங்கி பெயரையும் மாற்றிவைத்துவிட்டார்கள்.

ஆகவே நான் கம்பெனியிலிருந்துதான் விலகினேனே தவிர, நடிகர்களிடமிருந்து விலகவில்லை. எனவே நான் அங்கு சென்றவுடன், என்னை அவர்கள் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார்கள். கும்பகோணத்தில் கொஞ்சநாள் நாடகம் நடத்தினோம். பிறகு அந்தக் கம்பெனி சென்னை வரவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

நாடகத்தில் நடிக்கும் ஒருவனாகவும்த நாடகத்தில் சம்பந்தப்பட்டவனாகவும் சென்னையில் நான் காலடி எடுத்து வைத்தது மங்கள கனசபா மூலம் தான். சென்னையில் நாங்கள் லட்சுமிகாந்தன் என்ற நாடகம் நடத்தினோம். அப்போது சென்னையில் லட்சுமிகாந்தன் என்றொரு பத்திரிகை எழுத்தாளர் இருந்தார். அவர் ஒரு புரட்சிகரமான பத்திரிகை நடத்திக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் பலர் அவருடைய பத்திரிகையைத் தான் படித்துக் கொண்டிருப்பார்கள். ஏனென்றால் அவர் பல விஷயங்களை வெளிப்படையாக எழுதுவார் போலிருக்கின்றது. அப்பொழுது நாங்கள் அவருடைய பெயரில் நாடகம் நடத்தினோம். நாடகம் நடந்துகொண்டிருக்கும் போது சில நாட்களில் மீண்டும் வறுமை என்னும் தொய்வு வந்தது.



கலைவாணர் என். எஸ்.கிருஷ்ணன் -டி.ஏ.மதுரம்

நாடக வசூல் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து மீண்டும் கஷ்டப்பட ஆரம்பித்தோம். அப்பொழுது தான் என்.எஸ்.கே. திருமதி மதுரம் அவர்கள் முன் வந்து இந்த மங்களகான சபா நாடகக் கம்பெனியை வாங்கிக் கொண்டார்கள். பிறகு மங்களகான சபா என்பது மாறுபட்டு என்.எஸ்.கே.நாடகக் கம்பெனி என்று அதற்குப் பெயர் வைக்கப்பட்டது. அப்பொழுது சினிமாவில் நடித்துக்கொண்டிருந்த பழைய நடிகர்கள் எல்லாம் இந்த நாடகக் கம்பெனிக்குள் வரஆரம்பித்துவிட்டார்கள். என்.எஸ்.கே அப்பொழுது நல்ல நகைச்சுவை நடிகர் என்று மக்களிடத்தில் ஓகோ வென பெயர் எடுத்திருந்தார். என். எஸ்.கே. இல்லாமல் நகைச்சுவையே இல்லை என்பது போல் இருந்தது. உயர்ந்த கருத்துக்களை காமெடி மூலம் மக்களுக்கு முதன் முதலில் கூறியவர் அவர்தானே. வெளிநாடகக் கம்பெனியில் நடித்துக்கொண்டிருந்த அண்ணன் கே.ஆர்.ராமசாமி அவர்கள். டி.வி.நாராயணஸ்வாமி போன்றவர்களையெல்லாம் தன் நாடகக் கம்பெனிக்குள் என்.எஸ்.கே அவர்கள் கொண்டு வந்தார்கள். பிறகு பழைய நாடகங்களையே புதிதாக வடிவமைத்து நடிக்க ஆரம்பித்தோம். ஏனென்றால் கே. ஆர். ராமசாமி கிளாசிக்காகத்தான் நடிப்பார். தலையில் நிறைய முடி வைத்துக் கொண்டு பாடி நடிக்கும் கிளாசிக் நடிப்பு அவருக்கு தெரியும். ரத்னாவளி, மனோகரா போன்ற நாடகங்கள் மறுபடியும் நடந்தன. ஆகையால் பழைய குருடி கதவைத் திறடி என்பதுபோல் நாடகத்தில் மறுபடியும் நான் பெண்வேஷம் போட ஆரம்பித்து விட்டேன். (தொடரும்)

# இந்திய ஐசிஐசிஐ வங்கிக்கிளை கொழும்பில் திறந்து வைப்பு

(கொழும்பு)

ஆசியாப் பிராந்தியத்தில் முன்னணி வகிக்கும் இந்தியாவின் இரண்டாவது பெரிய வங்கியான ஐசிஐசிஐ ஸ்ரீலங்கா தனது முதலாவது கிளையை கடந்த வியாழக்கிழமை கொழும்பில் திறந்துள்ளது.

அரசியல் பதட்டம் நிலவும் தற்போதைய நிலையில் கொழும்பில் பங்குச் சந்தையில் பங்குவிலைகள் வீழ்ச்சியடையும் நிலையிலும் இந்த வங்கியின் திறப்பு விழா நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நீண்ட கால தூரநோக்கில் இந்த வங்கிக்கு நல்ல எதிர்காலம் உண்டு என கொழும்பு வந்திருந்த அந்த வங்கியின் முகாமைத்துவ இயக்குநர் கமாத் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் இந்த வங்கி மட்டுமே இந்தியாவில் பெரும் பணச் செலவில் விளம்பரங்களைச் செய்வதும் குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் இரண்டு ஆண்டுகளில் வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் சுமார் 10க்கிளைகளை திறக்க தாம் திட்டமிட்டுள்ளதாகவும் கமாத்தெரிவித்துள்ளார். (த)

# ரயில் நிலைய அதிபர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(கொழும்பு)

ரயில் நிலைய அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. 32 ரயில் நிலையங்களுக்கு புதிதாக ஒப்பந்த அடிப்படையில் உபரயில் நிலைய அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் முகாமையாளர் கே.ஏ. பிறேமசிறி தெரிவித்துள்ளார்.

கலவிப் பொதுத்தராதரப் சாதாரணப் தரப்பரீட்சையில் தாய்மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்த 18 வயதிற்கும் 45வயதிற்கும் இடைப்பட்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது .எழுத்து மூலம் போட்டிப்பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை எனபனவற்றின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பொதுமுகாமையாளர் அலுவலகத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவேண்டும் என ரயில்வே முகாமையாளர் தெரிவித்துள்ளார். (க-7)

# இளைஞர் பயிற்சித் திட்டத்திற்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

இளைஞர் பயிற்சித்திட்டத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. விண்ணப்பதாரிகள் 18 வயதிற்கும் 28 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருப்பதுடன் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவேண்டும். தகுதியான விண்ணப்பதாரிகள் கொமாண்டர் ஆர். எஸ் ஜெதிலக முதலாவது பணிப்பாளர் , இளைஞர் பயிற்சித் திட்டம், தபால்பெட்டி 530, கொழும்பு. என்ற முக வரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம். வதிவிட வசதியின்றி நடத்தப்படும் இப்பயிற்சி முழுநேர அடிப்படையில் இடம்பெறும் என்று திறன் அபி விருத்தி அரசாங்க தொழில் முயற்சிகள் சீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது . பிரதேச இளைஞர் நிலையங்களில் இருந்தும் தேர்தல் தொகுதிகளிலிருந்தும் உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

பயிற்சிக்காலத்தின் போது சீருடைகளும் பகல்போசனமும் 100 ரூபா படியும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

# மறவன் பயிற்சிப் பாசறையின் 8ஆவது அணியின் பயிற்சி நிறைவு





மறவன் பயிற்சிப்பாசறையில் தமிழீழ கடற்படை துணைப்படையின் 8ஆவது அணியினரின் பயிற்சிகள் நிறைவடைந்துள்ளன. வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றில் சிறப்புற நடைபெற்ற இந்த பயிற்சி நிறைவு நிகழ்வில் லெப்.கேணல் ராஜன், கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் கீதன் பொதுக் சுடரினை ஏற்றி ஆரம்பித்து வைத்தார். தேசியக் கொடியினை யாழ். மாவட்ட கடற்புலிகளின் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தமிழவன் ஏற்றிவைத்தார்.

ஈகைச்சுடரினை கடற்புலிகளின் தளபதிபதிகளில் ஒருவரான விநாயகம் ஏற்றிவைத்தார். தொடர்ந்து பயிற்சியை நிறைவு செய்தவர்கள் உறுதியுரை எடுக்கும் நிகழ்வும் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றது. இந் நிகழ்வில் சிறப்புரையினையும் ராஜன் கல்விப்பிரிவுப் பொறுப்பாளர் கீதன் நிகழ்த்தினார். (க)

# ஏமாற்றிவிட்ட 2005

## வலம்புரி நினைவுக் குறிப்பு

### செப்ரெம்பர்

01.09.2005 *கிளிநொச்சியில் தமிழ்த்தேசிய எழுச்சிப் பிரகடனம்.


02.09.2005 *ஐ.நா. செயலர் கொபி அனானின் சிறப்புத் தூதுவர் லக்டார் பிரக்மி இலங்கை வருகை.

04.09.2005 *பங்களாதேஷ் நாட்டு விமானப் படைத்தளபதி. எயார் வைஸ் மார்ஷல் பக்ருல் அசாம் இலங்கை வருகை.

05.09.2005 *கொபி அனானின் சிறப்புத் தூதுவர், சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் சந்திப்பு.



08.09.2005 *நோர்வே தூதுக்குழுவினர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கிளிநொச்சியில் சந்திப்பு.



*ஜே.வி.பியின் 12 நிபந்தனைகளை ஏற்று மஹிந்த ராஜபக்ஷ அக்கட்சியினருடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டார்.



14.09.2005 *முல்லைத்தீவில் தமிழ்த தேசிய எழுச்சி மாநாடு.




18.09.2005 *ஆயிரம் பெண்கள் ஒன்றுகூடிய பொங்கு தமிழ் நிகழ்வுக்கான முன்னோடி நிகழ்வு யாழ்.பல்கலையில் நடைபெற்றது.

19.09.2005 *இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நியூயோர்க்கில் ஆரம்பம்.

21.09.2005 *அரசிற்கு எதிராக திருமலையில் ஆர்ப்பாட்டம்.

22.09.2005 *ஈழத்தின் மூத்த எழுத்தாளர் காரை செ.சுந்தரம் பிள்ளை லண்டனில் காலமானார்.



28.09.2005 *மன்னாரில் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு.




30.09.2005 *யாழ்.பல்கலையில் பொங்குதமிழ் நிகழ்வு.

### உலக அரங்கில்

07.09.2005 *ஜப்பானில் சூறாவளி . ஒரு இலட்சம் பேர் பாதிப்பு.

14.09.2005 *பக்தாத்தில் தொடர் குண்டு வெடிப்பு. 160 பேர் பலி.

22.09.2005 *அமெரிக்காவை ரீட்டா சூறாவளி தாக்கியது.

*பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு . 8 பேர் பலி. 40 பேர் காயம்

(தொடரும்...)

# சுகாதாரப் பரிசோதகரைத் தாக்கிய நபர் பிணையில் செல்வதற்கு அனுமதி

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை நகரசபைச் சுகாதாரப பரிசோதகரைக் கடமை நேரத்தல் தாக்கிய நகரசபையின் சிற்றூழியரை 2ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 10ஆயிரம் ரூபா ஆட்பிணையிலும் செல்ல உத்தரவிட்ட நீதிபதி, சந்தேக நபர் முறைப்பாட்டுக்காரருடனோ, சாட்சிகளுடனோ எந்தவிதமான தலையீடுகளும மேற்கொள்ளக்கூடாதென்றும் கடும் எச்சரிக்கை செய்துள்ளார்.

வல்வெட்டித்துறை நகரசபைச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.திருநவன் கடமையிலிருந்த போது கடமையிலிருந்த சிற்றூழியரான அழகுமலை ஜெகநாதன் என்பவர் அவரைத் தாக்கிப் பங்கம் விளைவித்ததாக வல்வெட்டித்துறைப் பொலிஸில் புகார் செயயப்பட்டிருந்ததையடுத்து அதுபற்றி விசாரணைகளை மேற்கொண்ட வல்வெட்டித்துறைப் பொலிஸார் சந்தேக நபரைப் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

சம்பவம் நிகழ்ந்தபோது அச் சிற்றூழியர் மதுபோதையில் இருந்தாரா என்பதை அறிவதற்காக அவரை பரிசோதனை செயத வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.மயிலேறும்பெருமாள், சந்தேக நபரான சிற்றூழியர் மதுபோதையில் இருந்துள்ளார் என்று நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்பபித திருநதார்.

நீதிபதி சந்தேக நபரை கடுமையாக எச்சரித்து 2ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 10 ஆயிரம் ரூபா ஆட்பிணையிலும் செல்ல உத்தரவிட்டு மேல் விசாரணையை அடுத்த மாதம் 8ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (க-52)

# பதில் அதிபர்

(பருத்தித்துறை)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பதில் அதிபராக, எஸ்.தர்மலிங்கம் பொறுப்பேற்றுள்ளார்.

இக்கல்லூரியின் அதிபராகவிருந்த கே.நடரராஜா சேவையிலிருந்து அண்மையில் இளைப்பாறியுள்ளார் என்பது தெரிநததே. (க-52)

# பொதுமக்களைப் பாதுகாக்க விசேட பொலிஸ் கட்டமைப்பு

நாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துமுகமாகவும், பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதிப் படுத்துமுகமாகவும் இலங்கையில் பொது மக்கள் பாதுகாப்பிற்கான சிறப்பு விசேட பொலிஸ் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப் படவுள்ளதாக இலங்கை பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இந்தப் பிரிவு இயங்கவுள்ளதாகவும், நாட்டில் உள்ள அனைத்து மக்களையும் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகள் இந்தப் பிரிவின் மூலம் முன்னெடுக்கபபடும் என்றும் பொலிஸமா அதிபர் மேலும் தெரிவித்தார். (க)

# மீனவர்கள் இரவு நேரங்களில் தொழிலில் ஈடுபட மன்னாரில் தடை

(மன்னார்)

மன்னார் கடற்பிராந்தியத்தில் இனிவரும் நாடகளில் இரவு நேரங்களில் கடற்தொழிலில் ஈடுபடுவதை மறு அறிவித்தல் வரை காலவரையறையின்றி தடைசெய்துள்ளதாக இலங்கை கடற்படை அறிவிததுள்ளது.

இந்தத் தடை உத்தரவு நேற்று முன்தினம் மாலை முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஏ.நிக்கிளஸ்பிள்ளை தலைமையிலான மன்னார் மாவட்ட அரச செயலக அதிகாரிகளுக்கும், மன்னார் பிராந்திய இலங்கை கடற்படையினரின் கட்டளையிடும் அதிகாரி லியனகேக்கும் இடையில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெறற முக்கிய சந்திப்பின்போதே இந்தத் தகவல வெளியிடப்பட்டுள்ளது.

காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையிலான 12 மணித்தியாலங்கள் மட்டுமே கடற்பிராந்தியத்தல் கடற்றொழிலாளர்கள் சென்று மீன்பிடிக்கலாம் என்றும் மாலை 6 மணிக்கு முன்னர் அனைவரும் கரைக்குத் திரும்பிவிடவேண்டும் எனவும் அவ்வாறு திரும்பாதவர்கள் மறுநாள் காலை 6 மணிக்குப் பின்னரே கரை திரும்பலாம் எனவும் கடற்படையினர் எச்சரித்துள்ளனர். (க)

# அரசாங்கத்தின் செயற்பாடு பாராட்டுக்குரியது

(கொழும்பு)

தேசியப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவது பாராட்டிற்குரியது என்று அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துளளார்.

இதற்கென நாட்டிலுள்ள இரண்டு பிரதான கட்சிகளுக்கும் இடையே பொதுவான இணக்கப்பாடு காணப்படவேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் யுத்த சூழ்நிலையை உருவாக்க விடுதலைப்புலிகள் எடுத்துவரும் முயற்சிகள், பேச்சுவார்த்தைகளின் மூலம் பரஸ்பர புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதன் மூலமாக தோற்கடிக்கப்படவேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.

முக்கியமான இக்காலகட்டத்தில் பாதுகாப்புப் படையினர் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார். (த-7)

# ICC சர்வதேச கிரிக்கெற் சபை ICC

## INTERNATIONAL CRICKET COUNCIL

13

# டெஸ்ட் கிரிக்கெற் போட்டி

## போட்டித் தொடரில் அதிக விக்கெற்

| | விக் | போட் | ஓட் | சரா | காலப் பகுதி |
|---|---|---|---|---|---|
| எஸ்.பேண்ஸ் (இங்) எதிர் தென் ஆபி | 49 | 5 | 536 | 10.93 | 1913/14 |
| ஜே.லேகர் (இங்) எதிர் அவுஸ் | 46 | 5 | 442 | 9.60 | 1956 |
| சி.கிறீம்மீற் (அவுஸ்) எதிர் தென் ஆபி | 44 | 5 | 642 | 14.59 | 1935/36 |
| ரி.ஓல்டர்மான் (அவுஸ்) எதிர் இங் | 42 | 6 | 893 | 21.26 | 1981 |
| ஆர்.ஹொக் (அவுஸ்) எதிர் இங் | 41 | 6 | 527 | 12.85 | 1978/79 |
| ரி.ஓல்டர்மான் (அவுஸ்) எதிர் இங் | 41 | 6 | 712 | 17.36 | 1989 |
| இம்ரான் கான் (பாக்) எதிர் இந் | 40 | 6 | 558 | 13.95 | 1982/83 |
| ஷேன் வோர்ண் (அவுஸ்) எதிர் இங் | 40 | 5 | 797 | 19.92 | 2005 |
| ஏ.பெட்ஷர் (இங்) எதிர் அவுஸ் | 39 | 5 | 682 | 17.48 | 1953 |
| டெனிஸ் லில்லி (அவுஸ்) எதிர் இங் | 39 | 6 | 870 | 22.30 | 1981 |
| எம்.ரேற் (இங்) எதிர் அவுஸ் | 38 | 5 | 881 | 23.18 | 1924/25 |
| டபிள்யூ. வைற்றி (அவுஸ்) எதிர் தென் ஆபி | 37 | 5 | 632 | 17.08 | 1910/11 |
| எச்.ரைவல்ட் (தென் ஆபி) எதிர் இங் | 37 | 5 | 636 | 17.18 | 1956/57 |
| கிளென் மெக்ரா (அவுஸ்) எதிர் இங் | 36 | 6 | 701 | 19.47 | 1997 |
| ஏ.வோக்லெர் (தென் ஆபி) எதிர் இங் | 36 | 5 | 783 | 21.75 | 1909/10 |
| ஏ.மெய்லி (அவுஸ்) எதிர் இங் | 36 | 5 | 946 | 26.27 | 1920/21 |
| ஜி.லோமான் (இங்) எதிர் தென் ஆபி | 35 | 3 | 203 | 5.80 | 1895/96 |
| எம். மார்ஷல் (மேற் இந்) எதிர் இங் | 35 | 5 | 443 | 12.65 | 1988 |
| வி.சந்திரசேகர் (இந்) எதிர் இங் | 35 | 5 | 662 | 18.91 | 1972/73 |

## தொடர்ச்சியான போட்டி.... 10 விக்கெற்

அடுத்தடுத்த போட்டிகளில் (இரு இன்னிங்ஸிலும்) 10 விக்கெற்றுக்களைக் கைப்பற்றியோர் வரிசையின் முதலிடத்தில் இருப்பவர் இலங்கையின் நட்சத்திர சுழற் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன்.

இவர் தொடர்ச்சியாக 4 போட்டிகளில் 10 விக்கெற்றுக்களைக் கைப்பற்றியுள்ளார். (இந்தியாவுக்கு எதிராக 11 - 196, பங்களாதேஷிற்கு எதிராக 10 - 111, மேற் இந்தியாவுக்கு எதிராக 11 - 170, 10 - 135)

இவருக்கு அடுத்த படியாக இருப்பவர் அவுஸ்திரேலிய அணியின் சி.கிறீம்மீற். இவர் தொடர்ச்சியாக மூன்று போட்டிகளில் 10 விக்கெற்றுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

இவர் தென் ஆபிரிக்காவுக்கு எதிரான போட்டித் தொடரிலேயே 10 விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார். (10-88, 10-110, 13-173)

இவர்களுக்கு அடுத்ததாக இருப்பவர்கள் இருமுறையே தொடர்ச்சியாக 10 விக்கெற்றுக்களைக் கைப்பற்றியுள்ளனர். அவ் வரிசையில் 20 பேர் இடம்பெற்றுள்ளனர்.

அப்துல் ஹாடிர் (பாக்) இங்கிலாந்துக்கு எதிராக 10 - 211, 13-101

எஸ்.பேண்ஸ் (இங்) தென் ஆபிரிக்காவுக்கு எதிராக 10-115, 13-57

எஸ்.பேண்ஸ் (இங்) தென் ஆபிரிக்காவுக்கு எதிராக 10-105, 17-159 (இவர் இரு முறை தொடர்ச்சியாக இரு போட்டிகளில் 10 விக்கெற்றினைக் கைப்பற்றியுள்ளார். தென் ஆபிரிக்காவுக்கு எதிராகவே இவ் விக்கெற்றினைக் கைப்பறினார். இருந்தும் முதல் இரு போட்டிக்குப் பிறகு அதாவது மூன்றாவது போட்டியில் 5 விக்கெற்றினை வீழ்த்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது)

| | | | |
|---|---|---|---|
| ஏ.பெட்ஷக் | (இங்) | இந்தியாவுக்கெதிராக | 11-45, 11-93 |
| ஜே.பிறிஜ்ஸ் | (இங்) | அவுஸ்திரேலியாவுக்கெதிராக | 12 - 136, 10-148 |
| ஏ.பிறீமன் | (இங்) | தென் ஆபிரிக்காவுக்கெதிராக | 10 - 207, 12-171 |
| ஹர்பஜன் சிங் | (இந்) | அவுஸ்திரேலியாவுக்கெதிராக | 13-196, 15-217 |
| ஆர்.ஹொக் | (அவுஸ்) | இங்கிலாந்துக்கெதிராக | 10-122, 10-66 |
| இம்ரான் கான் | (பாக்) | இந்தியாவுக்கெதிராக | 11-79, 11-180 |
| ஜே.லேகர் | (இங்) | அவுஸ்திரேலியாவுக்கெதிராக | 11 - 113, 19-90 |
| டெனிஸ் லில்லி | (அவுஸ்) | நியூஸிலாந்துக்கெதிராக | 11-123, |
| | | இங்கிலாந்துக்கெதிராக | 11-165. |
| ஜி.லோமான் | (இங்) | தென் ஆபிரிக்காவுக்கெதிராக | 15-45, 12-71 |
| ஏ.மெய்லி | (அவுஸ்) | இங்கிலாந்துக்கெதிராக | 10-302, 13-236 |
| ரி.றிச்சட்ஸன் | (இங்) | அவுஸ்திரேலியாவுக்கெதிராக | 11-173, 13-244 |
| சக்ளைன் முஷ்தாக் | (பாக்) | இந்தியாவுக்கெதிராக | 10-187, 10-216 |
| எஸ்.றூமான | (இங்) | மேற்இந்தியாவுக்கெதிராக | 11-152, 12-119 |
| எச்.நம்பிள் | (அவுஸ்) | இங்கிலாந்துக்கெதிராக | 10-128, 12-173 |
| சி.ரேர்ணர் | (அவுஸ்) | இங்கிலாந்துக்கெதிராக | 12 -87, 10-63 |
| வாக்கார் யூனிஸ் | (பாக்) | நியூசிலாந்துக்கெதிராக | 10-106, 12-130 |
| ஷேன் வோன் | (அவுஸ்) | இலங்கைக்கெதிராக | 10-159, 10-155 |

## தொடர்ச்சியான இன்னிங்ஸ்... 5 விக்கெற்

| | | | | |
|---|---|---|---|---|
| சி.ரேர்ணர் | (அவுஸ்) | எதிர் இங்கிலாந்து | 5-44 | சிட்னி |
| | | | 7-43 | சிட்னி |
| | | | 5-27 | லோர்ட்ஸ் |
| | | | 5-36 | லோர்ட்ஸ் |
| | | | 6-112 | ஓவல் |
| | | | 5-86 | மஞ்செஸ்ரர் |
| ஏ.பெட்ஷர் | (இங்) | எதிர் இந்தியா | 5-27 | மஞ்செஸ்ரர் |
| | | | 5-41 | ஓவல் |
| | | அவுஸ்திரேலியா | 7-55 | நொட்டிங்கம் |
| | | | 7-44 | நொட்டிங்கம் |
| | | | 5-105 | லோர்ட்ஸ் |
| ரி.றிச்சட்ஸன் | (இங்) | எதிர் அவுஸ்திரேலியா | 6-104 | மெல்பேர்ண் |
| | | | 6-39 | லோர்ட்ஸ் |
| | | | 5-134 | லோர்ட்ஸ் |
| | | | 7-168 | மஞ்செஸ்ரர் |
| | | | 6-76 | மஞ்செஸ்ரர் |
| எஸ்.பேண்ஸ் | (இங்) | எதிர் தென் ஆபிரிக்கா | 5-57 | டேர்வன் |
| | | | 5-48 | டேர்வன் |
| | | | 8-56 | ஜொன்னெஸ்பேர்க் |
| | | | 9-103 | ஜொன்னெஸ்பேர்க் |
| ஜே.பிறிஜ்ஸ் | (இங்) | எதிர் அவுஸ்திரேலியா | 6-49 | அடிலெய்ட் |
| | | | 6-87 | அடிலெய்ட் |
| | | | 5- 34 | ஓவல் |
| | | | 5-114 | ஓவல் |
| ஹ்பஜன் சிங் | (இந்) | எதிர் அவுஸ்திரேலியா | 7-123 | கல்கத்தா |
| | | | 6-73 | கல்கத்தா |
| | | | 7-133 | சென்னை |
| | | | 8-84 | சென்னை |
| ஆர்.கொக் | (அவுஸ்) | எதிர் இங்கிலாந்து | 5-65 | பேர்த் |
| | | | 5-57 | பேர்த் |
| | | | 5-30 | மெல்பேர்ண் |
| | | | 5-36 | மெல்பேர்ண் |
| இம்ரான் கான் | (பாக்) | எதிர் இந்தியா | 8-60 | கராச்சி |
| | | | 6-98 | பைஸலாபாத் |
| | | | 5-82 | பைஸலாபாத் |
| | | | 6-35 | ஹைதராபாத் |
| முத்தையா முரளிதரன் | (இல) | எதிர் பங்களாதேஷ் | 5-13 | கொழும்பு |
| | | | 5-98 | கொழும்பு |
| | | மேற் இந்தியா | 6-126 | காலி |
| | | | 5-44 | காலி |
| டெனிஸ் லில்லி | (அவுஸ்) | எதிர் நியூஸிலாந்து | 5-51 | ஒக்லாண்ட் |
| | | | 6-72 | ஒக்லாண்ட் |
| | | இங்கிலாந்து | 6-26 | மெல்பேர்ண் |
| | | | 5-139 | மெல்பேர்ண் |
| வக்கார் யூனிஸ் | (பாக்) | எதிர் நியூஸிலாந்து | 7-86 | லாகூர் |
| | | | 7-76 | பைஸலாபாத் |
| | | | 5-54 | பைஸலாபாத் |
| | | மேற் இந்தியா | 5-76 | கராச்சி |
| சக்ளைன் முஷ்தாக் | (பாக்) | எதிர் இந்தியா | 5-94 | சென்னை |
| | | | 5-93 | சென்னை |
| | | | 5-94 | டெல்லி |
| | | | 5-122 | டெல்லி |

## நேரயல்

### சாதனை மேல் சாதனை போதுமடா சாமி!



அவுஸ்திரேலிய அணித் தலைவர் தென்னாபிரிக்க அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் விளையாடியதன் மூலம் தனது 100 ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடி முடித்துள்ளார்.

ஆனால் இப்போடியில் இரு இன்னிங்ஸ்களிலும் சதம் பெற்றதன் மூலம் புதிய சாதனை ஒன்றை நிலை நாட்டியுள்ளார்.

முதலாவது இன்னிங்ஸில் 174 பந்துகளை எதிர்கொண்டு 12 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட 120 ஓட்டங்களைப் பெற்றார். இவர் முதல் இன்னிங்ஸில் 10 ஓட்டங்களைப் பெற்ற போது 8 ஆயிரங்களையும் கடந்தார்.

இப்போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் 159 பந்துகளில் 16 பவுண்டரிகளுடன் 143 ஓட்டங்களைப் பெற்று அணியினை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றார்.

இப்போட்டியின் முதலாவது போட்டியில் சதம் பெற்றதன் மூலம் 100 ஆவது போட்டியில் சதம் பெற்ற வீரர்கள் வரிசையில் 6 ஆவது வீரராக இடம்பெற்று சாதனை படைத்தார்.

### 100 ஆவது டெஸ்ட் போட்டியில் சதம் பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| கொலின் ஹவ்டரி | (இங்) | எதிர் அவுஸ் | 104 |
| கோடன் கிறீனீட்ஜ் | (மேற் இந்) | எதிர் இங் | 149 |
| இன்சமாம் உல் - ஹக் | (பாக்) | எதிர் இந் | 184 |
| ஜாவிட் மியாண்டட் | (பாக்) | எதிர் இந் | 148 |
| அலெக்ஸ் ஸ்ரூவேர்ட் | (இங்) | எதிர் இங் | 105 |
| றிக்கி பொண்டிங் | (அவுஸ்) | எதிர் அவுஸ் | 120 |

(அடுத்த வாரம் தொடரும்...)

கொல்லான் புலாலை மறுத்தானை கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

-குறள்

வலம்புரி

## பசு வதையைத் தடுக்க வாரீர்!

இன்றுப் பட்டி பொங்கல். கதிரவனுக்கு நன்றி செலுத்த தைத்திருநாளைத் தேர்தெடுத்த உழவர்கள் பாலைப் பொழிந்து தரும்பசுக்களுக்கும் உணவுக்கு உதவி செய்த எருதுகளுக்கும் நன்றிக் கடன் செலுத்தும் முகமாக தைப்பொங்கலுக்கு மறுநாள் பட்டி பொங்கலைச் செய்கின்றார்கள்.

ஓர் விவசாயியின் வாழ்க்கையில் மாடுகள் செய்கின்ற உதவிகள் ஏராளம். பயிர்செய் நிலங்களை உழுவது முதல் பயிரினங்களுக்கான இயற்கைப் பசளைகளைத் தருவது மற்றும் விளைபொருட்களைச் சந்தைப்படுத்த உதவுவது என மாடுகளின் பணி அளவு கடந்தது.

ஒரு காலத்தில் விவசாயிகளின் செல்வமாக மாடுகளே இருந்தன. அதனாலேயே தமிழில் 'மாடு' என்பது செல்வம் என்ற பொருளைப் பெற்றது.

இவை விவசாயியின் கண்ணோட்டத்தில் பார்க்கப்பட்டவை. மாறாக பொதுமக்களின் ஒட்டு மொத்தப் பார்வையில் தாய்ப்பாலுக்கு அடுத்தாக பசுப் பாலே பயன்படுத்தப்படுகின்றது.

மக்கள் போசாக்கு நிலையைப் பேணுவதில் பசுப் பால் மிக அவசியமான நிறை உணவாகும். இவற்றிற்கு மேலாக இந்து மக்கள் பசுக்களை கண் கண்ட தெய்வமாக போற்றினர்.

பசுவின் சாணத்தில் இருந்து பெறப்பட்ட திருநீற்றை சைவ மக்கள் சிவசின்னமாக அணிந்தார்கள். இத்தகைய பெருமைக்குரிய பசுக்களை இலங்கையை ஆட்சி செய்த அந்நியர்க்ள் வதை செய்து ருசி பார்த்தனர். குறிப்பாக ஆங்கிலேயரின் ஆட்சியில் பசுக்கள் மதமாற்றத்தின் பெயரால் கொல்லப்பட்டன.

இத்தகைய கொடூரமான நிகழ்வுகளை சுவாமி ஞானப்பிரகாசர், ஸ்ரீலஸ்ரீ.ஆறுமுகநாவலர் போன்றோர் கடுமையாக எதிர்த்தனர். பசுவதையைத் தாங்காமல் நாட்டை விட்டுவெளியேறினர்.

இவ்வாறு பசு வதைக்கு எதிராக சைவப் பெரியார்கள் மட்டுமல்ல; கிறிஸ்த அறிஞர்களும் தமது காத்திமான எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

அத்தகைய சிறப்புமிகுந்த யாழ்ப்பாணத்தில் இன்று மாட்டிறைச்சிக்கடைகள் சந்திக்குச் சந்தி அதிகரித்துள்ளன. மாட்டிறைச்சியை உண்பதில் சைவமக்களும் போட்டி போடுகின்ற பரிதாபம் மிகவும் வேதனைக்குரியது.

தெய்வமாக, தாயாக போற்றவேண்டிய பசுக்களை வெட்டி புலாலுண்ணும் கொடூரம் தடுக்கப்பட வேண்டும். இதனைத் தடுக்க இந்து அமைப்புக்கள் குரல் கொடுக்க வேண்டும்.

குறிப்பாக பசுவதையைத் தடுப்பதில் சில அமைப்புக்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளபோதும் இவ்வமைப்புக்களின் பணிக்கு போதிய ஆதரவை ஏனைய அமைப்புக்கள் வழங்கத் தவறிவிட்டன. எனவே பசுவதையைத் தடுப்பதில் இந்து அமைப்புக்கள் கனதியான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.


அதிலும் இந்து சமயத்துக்கென தனியான இந்துக் கலாசாரத் திணைக்களம் இயங்குவதனால் சட்ட ரீதியில் பசுவதையைத் தடுப்பதில் கூடிய கவனம் எடுப்பது அவசியம்.

அதேவேளை யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இறைச்சிக்கடைகளுக்கான அனுமதிகள் யாவும் மாநகரசபை, பிரதேச சபை ஆகியவற்றினாலேயே வழங்கப்படுகின்றது.

எனவே இத்தகைய உள்ளூராட்சி சபைகள் பசு வதையைத் தடுக்க முன்வரவேண்டும்.

# நாட்டை ஒன்றிணைப்பதே தற்போதைய தேவை —

## -ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

முறையான அதிகாரப் பங்கீட்டை முன்னைய அரசாங்கம் வழங்கத் தவறியமையே தனி நாட்டுக் கோரிக்கைக்கு காரண மென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது இதற்காக துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எட்டியாந்தோட்டையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு பேசிய போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,நாட்டைப் பிளவுபடுத்தாது அதிகாரத்தைப் பகிர்வதனைக் கருத்திற் கொண்டு அனைவரும் செயற்படவேண்டும். அடிமட்டத்திலிருந்து உயர்மட்டம் வரை அதிகாரத்தை எவ்வாறு பகிருவது, அரசாங்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் போது எவற்றைக் கவனிக்க வேண்டும் என்பது பற்றி அனைவரும் சிந்திக்கவேண்டும். அவ்வாறு சிந்தித்தால் இந்தப் பிரச்சினையிலிருந்து மீளமுடியும். இந்த நாட்டிலுள்ள பிரச்சினை நாட்டைப் பிளவுபடுத்துவதல்ல. நாட்டை ஒன்றிணைப்பதே ஆகும் என்றார். (த-39)

## திருகோணமலையில் கிளைமோர் மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் வெடிப்பதற்குத் தயாரான நிலையில் இருந்த இரண்டு கிளைமோர்க்குண்டுகளை இராணுவத்தினர் கண்டெடுத்துள்ளனர். கபரணவீதியில் தம்பளகாமம் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் இரண்டு கிளைமோர்களையும் மீட்டுள்ளனர். மீட்கபபட்ட இரு குண்டுகளும், குண்டு செயலிழக்கும் பிரிவினரால செயலிழக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கைகளை தீவிரப் படுத்தியுள்ளனர். (ச-39)

## மட்டக்களப்பில் அடைமழை

(திருகோணமலை)

மட்டக்களப்பில் சில தினங்களில் தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக தாழ்ந்த நிலப் பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. வவுணதீவு, கோரதீவுப்பற்று, பட்டினப் பளை ஆகிய பிரதேச செயலளார்களுக்குட்பட்ட பகுதிகளிலேயே பாதிப்பு எற்பட்டுள்ளது.

இவ் அடைமழை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து மேட்டுநில்ப்பகுதிகளுக்குச் சென்றுள்ளனர். (ச-39)

## உள்ளூர் மட்டத்தில் புலிகளுடன்பேச்சு நடத்தும் எண்ணம் படையினருக்கில்லை

(கொழும்பு)

தாக்குதல் சம்பவம் அதிகரித்து வரும் இந்தத் தருணத்திலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடன் உளளூர் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தும் எண்ணம் தற்சமயம் இலங்கை இராணுவத்திற்கு இல்லை என அரசியல் அவதானிகள் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இராணுவத்திற்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடனோ அல்லது அவர்கள் சார்ந்த தரப்பினரிடமோ பேச்சுவார்த்தைகளை நடத்தும் எண்ணம் இல்லை என்பதை உறுதிசெய்த இராணுவப் பேச்சாளர் இராணுவம், பேச்சு வார்த்தைகள் நடத்துவதானால் தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்மட்ட தரப்பினரிடம் மட்டுமே பேச்சுவார்த்தைகளை நடத்துமென தெரிவித்தார்.

அதேவேளை கடந்த ஆறு மாத காலப்பகுதியில் 57 படைத்தரப்பினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 102பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கும் இராணுவம் இந்தக் காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக 105 முறைப்பாடுகளை போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகள் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில் பரஸ்பரம் இரு தரப்பினரும் குற்றச்சாட்டை பதிவு செய்யும் பொழுதிலும் அவர்களது முறைப்பாட்டிற்கான சாட்சிகளை பெறத்தவறியுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார். (க-9)

## தரம்-I மாணவர்கள் நாளைமுதல் பாடசாலைகளில் அனுமதிக்கப்படுவர்

(கொழும்பு)

பாடசாலைகளில் இந்த ஆண்டு தரம் -1 இற்கான மாணவர்களின் அனுமதி நாளை முதல் இடம்பெறும்.

நாளைமுதல் மாணவர்கள் தேசிய பாடசாலைகளுக்கும் மாகாணக்கல்வியமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளுக்கும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் பட்டியல் பூரணப்படுத்தப்பட்டு ஏற்கனவே அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் மேன்முறையீட்டு ஆணையாளர் டி.சமரசேகர தெரிவித்துள்ளார்.

அனுமதிப்பட்டியல் தொடர்பாக எழும் பிரச்சினைகளைச கவனிப்பதற்கென அதிகாரிகளைக் கொண்ட தனியான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விபரங்கள் பாடசாலைகளின் அறிவித்தல் பலகைகளில் வெளியிடப்படும். இந்தப் பெயர்ப்பட்டியல்கள் இணையத்தில் வெளிவராது. இதேசமயம் இதுவரை எந்தவொரு பாடசாலைக்கும் சேர்த்துக்கொள்ளப்படாத பிள்ளைகளுக்கு 2வாரங்களுக்குள் பாடசாலை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## கட்டடத் தொகுதி திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைக்கோட்ட கட்டடத் தொகுதித் திறப்புவிழா நேற்று நண்பகல் 12மணிக்கு இடம பெற்றது.

விழாவில் அருட்திரு ஜே.பி.ஈ.செல்வராசா அடிகளார் மங்கள விளக்கினை ஏற்றிவைத்து கட்டடத் தொகுதியையும் திறந்து வைத்தார்.

தொடர்ந்து திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட் தந்தை ரீ.மரியசேவியர் உரைநிகழ்த்தினார். (க-132,133)

## வடக்கு-கிழக்கில் 186 கோடி ரூபா செலவில் வீடுகள் நிர்மாணிக்கப்படும்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு பகுதிகளுக்கான சுனாமி வீடமைப்பு நிர்மாணத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு 13 ஆயிரத்திற்கும் அதிகமான வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும்.

இதற்கென 186 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய கட்டட அபிவிருத்தி அமைச்சும் அரசாங்க நிறுவனங்களும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்.

யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்,திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் சுனாமியால் சேதமடைந்த அல்லது முற்றாக அழிந்த வீடுகள் நிர்மாணிக்கப்படும்.

இந்த மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்கள் இவ் வீடுகளைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர்.

இந்தத் திட்டத்தின் முதலாவது கட்டட வேலைக்கு நிதி உதவியாக 1கோடி 16 இலட்சத்து 20ஆயிரம் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதற்கு உலகவங்கி 75மில்லியன் அமெரிக்கடொலர்களை வழங்குகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## அரச கருமமொழி அமுலாக்கலை மீறுவோர் மீது சட்டநடவடிக்கை

(கொழும்பு)

அரச கரும மொழி அமுலாக்கலை மீறும் அரச ஊழியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்று அரசியல் யாப்பு விவகார மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

உளளூராட்சி சபைகள் மற்றும் சுகாதார,போக்குவரத்து சம்பந்தமான அலுவலகங்களின் போது அரச கரும மொழி மூல அமுலாக்கல் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுவது இல்லை என்று பல முறைப்பாடுகள் கிடைகப்பெற்றுள்ளன என்று அரசியல் யாப்பு விவகார மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் டியு குணசேகர தெரிவித்துள்ளார்.

கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை ஆராய்ந்த பின்னரே இந்தத் தீர்மானத்திற்கு வந்ததாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அரச கரும மொழி முறையாக நடைமுறைப்படுத்துவது இல்லை என தனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக குறிப்பிட்ட அவர் அது தொடர்பாக ஆராய்ந்து விரிவான விசாரணைகள் நடத்த தீர்மானித்ததுள்ளதாகத் தெரிவித்தார்.

அரச கரும மொழி அமுலாக்கும் சட்டத்தை மீறுவதாக கண்டறியப்படுகின்ற அரச அதிகாரிகள் தொடர்பாக நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவருமாறு அரச கரும மொழி மூல அமுலாக்கல் ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்கியிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

### தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



மனிதன் அறிந்தாலும் அறியாவிட்டாலும் அவனது ஆன்மாவில் எல்லையற்ற சக்தி உள்ளது. அவன் அதை உணரும் திறந்தைப் பொறுத்தே அது வெளிப்படுகிறது உங்கள் ஆற்றலின் மிகச சிறிய பகுதியையே நீங்கள் அறிந்துள்ளீர்கள் எல்லையற்ற ஆற்றலும் நல்வாழ்த்துக்களும் உங்களுள் கடல் போலுள்ளது.

சுவாமி விவேகானந்தர்



மட்டக்களப்பு போர்நிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகம் மீது நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலின் போது சேதமடைந்த கண்காணிப்புக் குழுவின் வாகனம்.

# இந்து சமுத்திரத்தில் பயணிப்பதற்கு விடுதலைப்புலிகளினால் ஆபத்து

## கடற்படையினால் இந்தியாவிடம் முறையீடு

(கொழும்பு)

இந்து சமுத்திரத்தில் சர்வதேச கடல் போக்குவரத்துக்கு விடுதலைப்புலிகளால் அச்சுறுத்தல் இருப்பதாக இலங்கைக் கடற்படையினர் இந்திய கடற்படையினருக்கு அறிவித்துள்ளனர்.

அந்தமான், நிக்கோபார் தீவில் இருக்கும் போர்பிளேயர் கடற்படை முகாமில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு மாநாட்டின் போதே இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணித்தியாலத்துக்கு 50 கடல் மைல் வேகத்தில் பயணிக்கக் கூடிய படகு ஒன்றில் 150 கிலோ வெடி மருந்து பொருத்தப்பட்டு கடற்படையின் கப்பல்களை அழிப்பதற்காக விடுதலைப்புலிகளின் படகுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக இந்தியக் கடற்படையினருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச கடல் போக்குவரத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய குழுக்கள் இன்று உள்ளன. விடுதலைப்புலிகளும் அவ்வாறானவர்களே. இந்நிலையில் இந்து சமுத்திரத்தின் பாதுகாப்புக் குறைவடைய இடம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடனீ கடற்படைப் படகுகள் மற்றும் கப்பல்களுக்கு சிறிய குண்டுகளை வீசக்கூடிய இலகுரக விமானங்களும் விடுதலைப் புலிகளிடம் இருப்பதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இத்தகைய தாக்குதல்களை முறியடிப்பதற்கு இந்திய கடற்படையின் உதவி தேவை என்றும் அவர் கூறியுள்ளார். (ச-4)

## கட்டளை அதிகாரி இடமாற்றம்

(கொழும்பு)

திருகோணமலை பவுள்முனைக் கடற்பரப்பில் கடற்படையின் டோறாப் படகு மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 13 கடற்படை வீரர்கள் பலியான சம்பவம் தொடர்பாக நடைபெற்ற விசாரணையையடுத்து கடற்படையின் திருமலை டோறாப் படகு அணியின் கட்டளை அதிகாரி உட்பட 10 பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமையில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் கடற்படைத் தளபதியினால் இந்த இடமாற்ற உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

திருமலைக் கடற்படையின் டோறாப் படகு அணியின் புதிய கட்டளை அதிகாரியாக கப்டன் நிசாந்த உளுகேதன்ன நியமிக்கப்பட்டுள்ளார். (ச-4)

# பொலிஸ் நிலையங்களுக்கு கொழும்பில் பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு விசேட பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பு நகரில் உள்ள பொலிஸ் நிலையமொன்றின் மீது தாக்குதல் நடத்துவதற்கான திட்டம் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளமையினால் எந்த ஒரு தாக்குதலுக்கும் முகம் கொடுக்கும் வகையில் அனைத்துப் பொலிஸ் நிலையங்களும் உசார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏதேனும்ஒரு தாக்குதல் மேற்கொள்ளப்படுமானால் அதற்கு முகம் கொடுக்கும் வகையில் விசேட பயிற்சி பெற்ற 150 பொலிஸாரைக் கொண்ட குழு ஒன்று நகரின் பாது காப்புக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றது.

கொழும்பின் பாதுகாப்புக்காக எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்டத்துக் பொறுப்பாக உள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்தப்பட இடம் உள்ளதாக இரகசிய தகவல் பிரிவின் மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இதனால் கொழும்பு நகரில் தேடுதல் நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டிருப்பதுடன் சந்தேகத்துக்கிடமான வாகனங்களை சோதனையிடுவதற்கான வீதித்தடைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

(ச-4,39)

## கண்காணிப்புக்...

இதேவேளை நேற்று முன்தினம் மட்டு. கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தின் மீது கைக்குண்டு வீச்சு சம்பவம் எதுவும் இடம்பெறவில்லை எனவும் புதைக்கப்பட்ட வெடி ஒன்றே வெடித்தாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக கூறப்பட்டது. (ச-4)

## பேச்சிற்கான...

மாநாட்டில் முதல் சுற்று கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இச் சந்திப்பில் அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டிய அவசியம் தொடர்பில் இணக்கம் காணப்பட்டிருந்தது தெரிந்ததே. (ச-4)

## இராணுவ வன்முறைகள்...

ஈடுபட்டுள்ளனர்.

வீதிகளில் சென்று வரும் அப்பாவி மக்களை கண்மூடித்தனமாக தாக்குகின்றனர். இராணுவ வன்முறைகளுக்கு எதிராக குரல் கொடுத்தவர்களை தேடித்தேடி பழிவாங்கி படுகொலை செய்து வருகின்றனர்.

அட்டூழியங்களை வெளிப்படுத்த முயன்ற, முயலுகின்ற ,குடாநாட்டு பத்திரிகையாளர்கள் ,ஊடகவியலாளர்கள் ,படப்பிடிப்பாளர்களை காட்டுமிராண்டித்தனமாக தாக்கி உண்மைகளை உலகிற்கு தெரியவிடாமல் மறைத்து வருகின்றனர்.

இராணுவத்தினால் மேற்கொள்ளப்படும் கொடூர சம்பவங்கள் குறித்து உடனுக்குடன் 021 222 3942, 021 222 3744,077 3024316 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தெரியப்படுத்துமாறும் அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான ந.ரவிராஜ், சுரேஸ்பிரேமச்சந்திரன், சிவநேசன் ஆகியோரது அலுவலகங்களிலும் முறைப்பாடுகளை செய்ய முடியுமெனவும் கஜேந்திரன் எம்.பி. மேலும் தெரிவித்தார். (ச)

## திருமலை...

டைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விடுதலைப்புலிகளினது சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் கண்காணிப்புக்குழுவிற்கு கடிதமொன்றினை அனுப்பியுள்ளார். (ச-4-6)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்புடையீர்!

கடந்த 16.12.2005 வெள்ளிக் கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

**கணபதிப்பிள்ளை கணேசன்**

அவர்களின்

வீட்டுக்கிருத்தியம் இன்று (15.01.2006) காலை 7 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து இவ் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் ,அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

கோயிற்கடவைப் பிள்ளையார் கோவிலடி,
துன்னாலை மத்தி, கரவெட்டி.

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

## சுருவிலில் கிளைமோர்த்...

ஊர்காவற்றுறை சுருவில் புளியங்கூடல் வீதியில் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் கடற்படையினர் வீதிக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அவ்வேளை மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் ஒன்று வெடித்தது. இதில் ஒரு படைச் சிப்பாய் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்கா்க பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். அங்கு ஒருசிப்பாய் சிகிச்சை பலனளிக்காமையினால் உயிரிழந்தார்.

இச் சம்பவத்தினையடுத்து அங்கு மேலதிக படையினர் குவிக்கப்பட்டு பாரிய தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.இதன் போது இரு இளைஞர்கள் கடற் புடையினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக் கைது குறித்து யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரனால் கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது.

இதேவேளை இத் தாக்குதலானது விடுதலைப்புலிகளினாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி. தசநாயக்க தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதல் சம்பவத்தினையடுத்து அல்லைப்பிட்டிமற்றும் பண்ணையில் உள்ள சோதனைச் சாவடிகளில் தீவிர சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. மக்களின் பொருட்கள் துருவித்துருவிச் சோதனையிடப்படுகின்றது. (ச)










இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.01.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.